பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 29 திங்கட்கிழமை 09.05.2022 கதிர் 185

### இது ரகசியம் அல்ல!

'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி!' என்பார்கள். இன்னும் கொஞ்சம் வித்தியாசமாக 'உள்ளதையும் கெடுத்தானாம்நொள்ளைக்கண்ணன்' என்றும் கூறுவதுண்டு. தற்போதைய நெருக்கடி நிலைகளை ஜனாதிபதி கோட்டாபய ☞ 2

## சட்டத்தரணிகள் சங்க யோசனைகள் குறித்து சங்கத்துடன் கோட்டா, மஹிந்த, சஜித் உட்பட பல தலைவர்களும் பேச்சு

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக் குழுவினர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ. எதிர்க்கட்சித் தலைவர், அரசியல் கட்சிகள் மற்றும் நாடாளுமன்றக் குழுக்களின் தலைவர்கள் ஆகியோரைச் சந்தித்து நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமையை மீண்டும் வழமைக்குக் கொண்டுவருவதற்காக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முன்வைத்துள்ள முன்மொழிவுகள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.

நேற்றுக் காலை ஜனாதிபதியைஜனாதிபதிமாளிகையிலும், அரசியல் கட்சிகளினதும் நாடாளுமன்றக் குழுக்களினதும் தலைவர்களைசட்டத்தரணிகள் சங்கத்தின் செயலகத்திலும், பின்னர் அலரி மாளிகையில் பிரதமரையும் சந்தித்து அவர்கள் உரையாடியுள்ளனர்.

நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவது தொடர்பிலும் தேசிய அரசாங்கம் ஒன்றை உருவாக்குவதற்கான சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்மொழிவுகள் தொடர்பிலும் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் சட்டத்தரணிகள் சங்கத்தினர் இதன்போது ☞ 2

# மஹிந்த இன்று ராஜினாமா அமைச்சரவை முடிந்த பின்!



## எதிர்க் கட்சித் தலைவர் பதவியைக் கோருவார்

கொழும்பு, மே 09

மஹிந்த ராஜபக்ஷ தாம் வகிக்கும் பிரதமர் பதவியை இன்று மாலை ராஜினாமாச் செய்வார் என்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது. இன்று மாலை அமைச்சரவை கூட்டத்தின் முடிவில் அவர் தனது ராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதியிடம் கையளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. ☞ 11

## இரணைமடுக் குளத்தில் மீன் பிடித்த இளைஞர் தவறி விழுந்து உயிரிழப்பு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே.09

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தில் மீன்பிடிக்கச் சென்ற இளைஞன் தவறி குளத்தில் வீழ்ந்ததில் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

கிளிநொச்சி சாந்தபுரத்தைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி ☞ 11

## தலைநகர் எங்கும் வீதி மறிப்புப் போர்

எரிவாயு தட்டுப்பாட்டை ஆட்சேபித்து தலைநகர் கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் நேற்று பல இடங்களிலும் மக்கள் வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

இதனால் நேற்றுப் பல இடங்களிலும் ☞ 11

## பதவி விலக முன் மஹிந்தர் இன்று மொட்டுக் கட்சியினருடன் பேச்சு

பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற, முன்னாள் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களை இன்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சந்திக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைப் பதவி விலகுமாறு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தின்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கோரியிருந்தார்.

மாற்று அரசாங்கமொன்றை உருவாக்க முடியும் ☞ 11

## மஹிந்தர் போனால் போதாது கோட்டாவும் போக வேண்டும்

### ஜே.வி.பி. விடாப்பிடி

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மாத்திரம் பதவி விலகுவது போதாது. ஜனாதிபதிகோட்டாபய ராஜபக்ஷவும் வீட்டுக்குப் போக வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஹட்டனில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

அவசரகால நிலைமையைப் பயன்படுத்தி மக்களை ஒடுக்குவதே பிரதமரின் பதவி விலகல் நாடகம். ஆனால் மக்கள் அதற்குப் பயப்படமாட்டார்கள். ☞ 2

## அரியாலைக் கடலில் மூழ்கி கொக்குவில்வாசி உயிரிழப்பு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே.09

கொக்குவிலைச் சேர்ந்த ஒருவர் நேற்று அரியாலைக் கடலில் வேறு மூவருடன் நீராடிய சமயம் கடலில் மூழ்கிப் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

கொக்குவிலைச் சேர்ந்த ஜெயமதன் ஞானகாந்தன் என்ற 35 வயதானவரே ☞ 11

## தமிழரின் அடிப்படை உரிமைகளைக் கூட அங்கீகரிக்காத சிங்களத் தலைமைகளுடன் ஒன்றிணைந்து போராடுவதா?

### முடியவே முடியாது என அடித்துக் கூறுகிறர் சிறீதரன் எம்.பி




முழங்காவில், மே 09

எங்களுக்கான அடிப்படை உரிமைகளைக் கூடப் பெற்றுத்தர முடியாத சிங்களத் தலைமைகளுடன் ஒன்றிணைந்து போராடுவதற்கு எப்போதும் நாம் தயாராக இல்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

முழங்காவில் விநாயகர் விளையாட்டு கழகத்தினால் நடாத்தப்பட்ட விநாயகர் வெற்றிக்கிண்ணம் என்னும் சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டி நேற்று நடைபெற்றது. அந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் – ☞ 11

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
ராஜபக்ஷ கையாளும் போக்கைப் பார்க்கும்போதும் இந்தப் பழமொழிகள்தான் நினைவுக்கு வருகின்றன.

ஆங்கிலத்தில் ஒரு விடயத்துக்குப் புதியவர் என்பதற்கு ஒரு சொல் உண்டு. Novice என்பதுதான் அது. அரசியலிலும் அரசியல் ரீதியான பதவிகளைக் கையாள்வதிலும் தாம் Novice என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்து வருகின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

அதுபற்றிய மேலோட்டத்தை இன்று பார்ப்போம்.

தற்போதைய அரசியல், பொருளாதார நெருக்கடிக்கான தீர்வு என்ற பெயரில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் 13 அம்ச யோசனை திட்டமொன்றை முன் வைத்து இருக்கின்றது. நாட்டின் புத்திஜீவிகள் பலரும் அதைச் சிலாகித்து மெச்சி வருகின்றனர். இலங்கை வர்த்தக சம்மேளனம், இலங்கைப் பட்டயக் கணக்காளர் சம்மேளனம், தொழில்சார் நிபுணர்கள் சம்மேளனம், ஸ்ரீலங்கா மருத்துவ சங்கம் போன்ற பிரதான அமைப்புகள் எல்லாம் இந்தத் திட்டத்தை பரிசீலித்து ஏற்று, அங்கீகரித்து உள்ளன.

இந்தத் திட்டத்தின் அடிப்படையில் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி இணங்குவாராயின் அதில் தாங்களும் இணையத் தயார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அறிவித்து விட்டார்.

ஏற்கனவே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சித் தரப்பு, சுயாதீனமாகச் செயற்படும் ஏனைய எம்.பிக்கள் குழுவினரின் தலைவர்கள், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எல்லோருமே இந்த யோசனைத் திட்டம் குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்க பிரதிநிதிகளைச் சந்தித்துக் கேட்டறிந்து விசாரித்து வருகின்றனர்.

இந்தத் திட்டத்தின் கீழ் எல்லாக் கட்சிகளும் இணைந்து ஒரு தீர்வு நகர்வை முன்னெடுக்கலாம் என்று பரவலாக நம்பப்படுகிறது. அப்படி ஓர் இணக்கம் ஏற்பட்டால் அந்த இணக்கத்தின் அடிப்படையில் ஜனாதிபதி, அரசு, பிற அரசியல் கட்சிகள் எனத் தரப்புகளுக்கு இடையில் அனுசரணைப் பணி அல்லது நடுநிலை மத்தியஸ்தப் பங்களிப்பு வழங்கும் சேவையை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முன்னெடுக்க முடியும் என்று கருதப்படுகின்றது.

இந்தப் பின்புலத்தில் நேற்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் மூத்த பிரதிநிதிகளை ஜனாதிபதி சந்தித்தார். சந்திப்பில் ஜனாதிபதி பக்கத்தில் குறிப்பெடுக்கும் ஓர் அதிகாரி மட்டும்தான். வேறெந்த அமைச்சர்களோ, முக்கிய பிரமுகர்களோ கிடையாது. சட்டம் தெரிந்த பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், நிதி, நீதி அமைச்சர் அலி சப்ரி என எவரும் இல்லை. சட்டத்தரணிகள் சங்கப் பிரதிநிதிகள் – பிரமுகர்கள் – இது கண்டு மலைத்துப் போய் இருந்தனர்.

ஜனாதிபதி இப்படி நடந்து கொண்டமையில் இரண்டு விடயங்கள் இருக்கலாம்.

ஒன்று – விடய அல்லது அனுபவ அறிவு உள்ளவர்களோ ஆலோசகர்களோ இன்றி இத்தகைய விடயங்களில் தீர்மானிக்கும் அரசியல் விற்பன்னர் தாம் என்ற வழமையான மமதைச் சிந்தனை காரணமாக இருக்கலாம். அல்லது சட்டத்தரணிகள் சங்க திட்டத்தை நிராகரிப்பது என்று நேரத்துடன் தீர்மானித்துவிட்டாரோ என்னவோ.

எது, எப்படி என்றாலும் இவ்விடயங்களைக் கையாள்வதில் தாம் Novice தான் என்பதை மீள அவர் நிரூபித்திருக்கிறார்.

அடுத்தது – அவசரகால நிலையை அறிவித்த ஜனாதிபதியின் அனுபவ முதிர்ச்சி.

அரசமைப்புச் சட்டத்தின்படி இத்தகை அவசரகால நிலை அறிவிக்கப்பட்டு 10 நாள்களுக்குள் நாடாளுமன்றத்தில் அது சமர்ப்பிக்கப்பட வேண்டும். பிரகடனப்படுத்தப்பட்ட பொது மக்கள் பாதுகாப்பு சட்டத்தின் படி அதனைப் பிரகடனப்படுத்தி 14 நாள்களுக்குள் அதை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

அப்படிப் பார்த்தால் –

ஆறாம் திகதி நள்ளிரவு அச்சட்டத்தை ஜனாதிபதி பிரகடனப்படுத்தி உள்ளார். அப்படியாயின் 16ஆம் திகதிக்கு முன் முன்னர் நாடாளுமன்றத்தில் அது சமர்ப்பிக்கப்பட்டு, 19ஆம் திகதிக்கு முன்னர் அது தொடர்பான பிரேரணை நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும். நாடாளுமன்றம் ஏற்கனவே 17 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது. 16ஆம் திகதிக்கு முன்னர் அவசரநிலை நிலை அறிவித்தல் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றால் நாடாளுமன்றத்தை முற்கூட்டியே கூட்ட வேண்டிய கட்டாயம் சபாநாயகருக்கு ஏற்பட்டுள்ளது.

இன்று சபாநாயகர் தலைமையில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களின் கூட்டம் நடைபெறுகின்றது. அதில் இவ்விடயம் ஆராயப்பட்டு, நாடாளுமன்றத்தை சில தினங்கள் முன் கூட்டியே அழைக்கும் திட்டத்தை சபாநாயகர் முன்னெடுக்க வேண்டி நேரும் என்று நினைக்கிறேன்.

இனி, இப்போதைய அரசியல் நிலைமையை ஜனாதிபதி கோட்டாபய கையாளும் விதத்தைப் பார்ப்போம்.

இடைக்கால அரசோ, சர்வகட்சி அரசோ, தேசிய ஒருமைப்பாடு அரசோ ஏதோ ஒன்றை நிறுவுவது ஜனாதிபதியின் திட்டமாக இருக்கலாம். ஆனால் அத்தகைய அரசுக்கான அடிப்படை வடிவம் கூட உருவாக முன்னரே, அதற்கு இடம் அளிப்பதற்காக இருக்கும் பிரதமரை விட்டுக் கொடுக்குமாறு நச்சரிக்கத் தொடங்கி விட்டார் ஜனாதிபதி.

இது மோசமான – விபரீதமான – நிலைமைக்கு நாட்டைக் கொண்டுபோய் நிறுத்தும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடியது.

இப்போதைய அரசியல் விடயங்களைக் கையாளும் ஜனாதிபதியின் போக்கு தொடர்பில் தமது அதிருப்தி விவகாரங்களை விவரித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று ஒரு நீண்ட கடிதத்தை தனது தம்பியார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்தார் என அறிய முடிந்தது.

பிரதமரிடம் இருந்து கடிதம் ஒன்று சீல் உரையில் ஜனாதிபதிக்குச் செல்கின்றது என்பதை அறிந்ததும் சில சிங்கள ஊடகங்கள் முந்திக்கொண்டு பிரதமர் ராஜினாமாச் செய்துவிட்டார் என்று நேற்று மாலை செய்திகளை வெளியிடத் தொடங்க ஒரே களேபரமாகப் போய் விட்டது.

இது ராஜினாமாக் கடிதத்துக்கு முந்திய அதிருப்திக் கடிதம் மட்டும்தான். ராஜினாமாக் கடிதம் இன்று மாலைக்கு பிறகுதான் ஜனாதிபதியின் கைகளுக்குச் செல்லும். மஹிந்த பிரதமர் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டு எதிர்க்கட்சித் தரப்புக்கு எண்பது எம்.பிக்களுடன் போய் அமருவேன் என்கிறார். குறைந்தது 50 முதல் 60 எம். பிக்களாவது அவருடன் எதிர்க்கட்சிக்குப் போவார்கள் என்று மதிப்பிடப்படுகின்றது. ஆளும் தரப்புடன் இணைந்து தொடர்ந்து கெட்ட பெயரைச் சம்பாதித்து, தத்தமது தொகுதிகளில் மக்களுக்கு முகம் காட்ட முடியாத துரோகிப் பட்டம் எடுப்பதை விட, கிடைக்கும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி எதிர்க்கட்சிகளின் பக்கம் போய் அமர்ந்து விட்டால் தத்தமது மக்களின் சீற்றத்தையாவது தணிக்கலாம், சொந்த இடத்தில் கள நிலைமையைச் சுமுகமாக்கலாம் என்ற எண்ணத்தில் கணிசமான அரசுத்தரப்பு எம்.பிக்கள் மஹிந்தவுடன் எதிரணிப் பக்கம் போவார்கள் என்று கருதப்படுகின்றது.

ஏற்கனவே சஜித் தரப்பில் சுமார் 50 எம்.பிக்கள் உள்ளனர். மேலும் ஐம்பது அல்லது அறுபது எம்.பிக்கள் எதிரணிப் பக்கம் வந்து விட்டால், கூட்டமைப்பு உட்பட்ட தமிழ் எம்.பிக்கள், ஜே.வி.பி. எல்லோரும் சேர எதிரணியில் 125 க்கும் குறையாத எம்.பிக்கள் அமர்வது உறுதியாகிவிடும்.

மிச்சம் இருக்கக் கூடிய நூற்றுக்கும் குறைவான எம்.பிகளை வைத்துக் கொண்டுதான் இனிமேல் ஜனாதிபதி தேசிய ஒருமித்த அரசையோ, சர்வகட்சி அரசையோ நிறுவப் போகின்றார்.

புதிய அரசு அல்லது மாற்று அரசு அமைப்பதற்குப் பெரும்பான்மை எம்.பிக்களின் ஆதரவு பெற்ற ஒரு தரப்பைத் தயார் செய்ய முன்னர், இருக்கும் பிரதமரையும் வீட்டுக்கு அனுப்பி, நாடாளுமன்ற அரசியலை பெரும் குழப்பத்தில் ஆழ்த்த போகின்றார் ஜனாதிபதி.

இந்த விடயத்தைக் கையாள்வதிலும் தாம் Novice தான் என்பதை மீண்டும் நிரூபித்திருக்கிறார் ஜனாதிபதி. அப்படிப்பட்ட ஒருவரிடம் நாட்டின் நிறை வேற்று அதிகாரத்தை ஒப்படைத்த வர லாற்று குற்றத்திற்காக – தவறுக்காக – இலங்கை மக்கள் அனுபவிக்க வேண்டிய கஷ்டங்கள், தொல்லைகள் இன்னும் பலமடங்கு காத்திருக்கின்றன போலும்.

– மின்னல் –

---

## மஹிந்தர் போனால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்ட போதே மக்கள் வீதிக்கு இறங்கினர். எனவே மக்களின் உணர்ச்சிகளை யாராலும் கட்டுப்படுத்த முடியாது.

முழு நாடும் ஒரே குரலில் பிரதமரும் ஜனாதிபதியும் பதவி விலக வேண்டும் என்றும் இவர்கள் பதவி விலகினால் மாத்திரமே நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்றும் தெரிவிக்கின்றார்கள். தற்போது பிரதமர் பதவி விலகப்போகிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அது மாத்திரம் போதாது. எல்லோரும் கூறுவதைப் போல் கோட்டாவும் வீட்டுக்குப் போக வேண்டும்.

அவ்வாறு பிரதமர் பதவி விலகி புதிய அரசாங்கம் உருவானாலும் அமைச்சரவையின் பிரதானியாக ஜனாதிபதியே இருப்பார். எனவே புதிய அமைச்சர்களையும் பிரதமரையும் ஜனாதிபதியே நியமிப்பார்.

எனவே மக்களுக்குப் பிரச்சினைகளை ஏற்படுத்திய, விவசாயிகளுக்கு உரத்தை இல்லாமல் செய்த கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் புதிய அமைச்சரவை உருவாகினால் நாட்டின் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. இதனால் மேலும் நெருக்கடி அதிகரிக்குமே தவிர குறைவடையாது.

ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசாங்கம் பதவி விலகவேண்டும். அப்படியானால் மாத்திரமே சகல கட்சிகளும் ஒன்று கூடி இடைக்கால அரசாங்கம் ஒன்றை உருவாக்க முடியும்.

தேசிய மக்கள் சக்தி என்ற ரீதியில் சர்வகட்சி அரசாங்கத்தில் இணைய வேண்டுமாயின் பிரதமர், ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் பதவி விலகவேண்டும். இல்லையேல் இந்தப் போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். – என்றார்.

## மண்கும்பானிலும் ஒருவர் மூழ்கிச் சாவு

மண்கும்பான் சாட்டி கடலில் நேற்று நீராடிய அரியாலையை சேர்ந்த இராசரத்தினம் கணேசராசா (வயது 46) என்பவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

---

## சட்டத்தரணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
விளக்கமளித்தனர். அவசரகால நிலையைப் பிரகடனம் செய்தமை தொடர்பில் கவலையடைவதாக சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

பிரதமருடனான கலந்துரையாடலின் போது வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான பவித்ரா வன்னியாராச்சி, சி.பி. ரத்னாயக்க, பிரேமநாத் டோலவத்த ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் சுயாதீனமாகச் செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களான நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர, தயாசிறி ஜயசேகர, உதய கம்மன்பில, கெவிந்து குமாரதுங்க மற்றும் பைசர் முஸ்தபா ஆகியோரையும் சட்டத்தரணிகள் சங்கத்தினர் சந்தித்து உரையாடினர்.

பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சங்கத்தின் நிறைவேற்றுக் குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடல்களின் போது இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினர் தங்கள் முன்மொழிவு களுக்கான கட்டமைப்புக்கள் தொடர்பில் விளக்கமளித்தமையுடன் அவற்றை அமல்படுத்துவது தொடர்பான கேள்விகளுக்கும் பதில் அளித்திருந்தனர். தற்போதைய நெருக்கடி நிலையில் சட்டத்தரணிகள் சங்கத்தின் பங்களிப்பை அனைத்துக் கட்சிகளும் பாராட்டியிருந்தன. நாடாளுமன்றத்துக்கோ அல்லது ஜனாதிபதிக்கோ முன்வைக்க வேண்டிய தங்கள் முன்மொழிவுகளையும் கருத்துக்களையும் கட்சிகள் இதன்போது பகிர்ந்து கொண்டனர்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இந்த முன்மொழிவுகளை ஏற்கனவே இலங்கை வர்த்தக சம்மேளனமும் ஏற்றுக் கொண்டிருந்தது. கூட்டு வர்த்தக சம்மேளனம், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம், தொழில்முறை நிபுணர்கள் சங்கங்களின் அமைப்பு மற்றும் இலங்கை மருத்துவ சங்கம் ஆகியவற்றுக்கும் இந்த முன்மொழிவுகள் வழங்கப்பட்டிருந்தன.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நாடாளுமன்ற நாடகம்

கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றிய யாழ்.மாவட்டப் பிரதிநிதியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சில உண்மைகளைப் பகிரங்கமாக எடுத்துரைத்திருக்கின்றார்.

உயரிய – மாண்புமிக்க – முறையான – ஜனநாயகத்தில் இருக்கும் பெரும் ஓட்டையைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார் அவர். அதைப் பயன்படுத்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொரும் நடிக்கின்றனர் என்ற உண்மையை அவர் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தியிருக்கின்றார்.

ஜனநாயக வாக்குரிமை என்ற பெயரில் ஒரு ஜனாதிபதியையோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினரையோ மக்கள் தெரிவு செய்து விட்டால், அவர் என்ன கூத்தடித்தாலும் – ரணகளம் பண்ணினாலும் – மக்கள் அடுத்த ஐந்தாண்டுகளுக்குப் பார்த்திருக்க வேண்டியதுதான் என்ற ஜனநாயகத்தின் பின்னடைவான பண்பியல்பையே, இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைவரங்களின் பின்புலத்தில் வைத்து நாடாளுமன்றத்தில் பிரஸ்தாபித்திருக்கின்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

“ஜனநாயக முறையின் படி மக்கள் ஒரு குறித்த காலத்துக்கு ஆட்சிபுரிவதற்கான ஆணையை வழங்கிய நிலையில், தாம் வழங்கிய ஆணை மீறப்பட்டதை உணரும்போது, தாம் மோசடிக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதை உணரும்போது, மக்களுக்கிருக்கும் ஒரே தெரிவு தாம் வழங்கிய ஆணையை மீள பெற்றுக்கொள்வது மட்டும்தான். ஆனால் இவ்வாறு தாம் வழங்கிய ஆணையை மீளப் பெற்றுக்கொள்வதற்கு சட்டரீதியான ஏற்பாடுகள் எதுவும் இல்லாதிருப்பதால், மக்களின் முன் இருக்கும் ஒரே தெரிவு வீதிகளில் இறங்கித் தாம் ஆணை வழங்கியவர்கள் ஆட்சியில் இருந்து விலகுவதை உறுதிப்படுத்தும் வரைப் போராடுவது மட்டும்தான்.”

– என்று தமக்கேயுரித்தான அர்த்தம் பொதிந்த ஆங்கிலச் சொல்லாடல்களில் யதார்த்தத்தை விவரித்திருக்கின்றார் அவர்.

மக்கள் தம் முன்னால் இருக்கும் ஒரே தெரிவான வீதிகளில் இறங்கிப் போராடுதல் என்ற மார்க்கத்தை நாடியிருக்கின்றார்கள். அதன் மூலம் பேரழிவு நிலையிலிருந்து – பேரிடர் இக்கட்டில் இருந்து – தமது தாய் நாட்டை மீட்டு விட முடியாதா என்ற தேசச் சிந்தனையோடு – தேசிய எண்ணத்தோடு – சுய நலம் துறந்து, பொது இலக்கை அடைய அவர்கள் தங்கள் சுக துக்கங்களை மறந்து, வீதிக்கு இறங்கியிருக்கின்றார்கள்.

மக்கள் இப்படி வீதிகளில் இறங்கிப் போராடிக் கொண்டிருக்க, அவர்களின் பிரதிநிதிகள் என்று கூறிக் கொள்ளும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் இங்கே நாடாளுமன்றத்தில் நாடகமாடிக் கொண்டிருக்கின்றோம் என்று விசனித்திருக்கின்றார் கஜேந்திரகுமார்.

ஜனாதிபதியும் மக்களின் ஆணையை இழந்து விட்டார். இந்த நாடாளுமன்றமும் மக்கள் தந்த ஆணையைத் தொலைத்து விட்டது. வீதிக்கு இறங்கிப் போராட்டம் நடத்துவதே தமது வாழ்வியல் என்று மாற்றிக் கொண்டு நிற்கும் இலங்கை மக்கள் தெளிவாக வெளிப்படுத்தும் செய்தி அதுதான்.

தற்போதைய நாடாளுமன்றம் காலாவதியாகி விட்டது என்று மக்கள் தெளிவுபடுத்தும் செய்தியை – முடிவை – புரியாதவர்கள் போல நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடகமாடுகின்றனர் என்பதுதான் அவர் உரைக்கும் உண்மை.

காலாவதியான நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டு, புதிய பொதுத் தேர்தலுக்குப் போய் மக்களிடம் புதிய ஆணை பெறுவதுதான் நீதி, நியாயம், தர்மம்.

தத்தமது பதவியாசைக்காக ஜனாதிபதியிலிருந்து எம்.பிக்கள் வரை அனைவரும் நாடகம் நடத்துகின்றனர் என்ற அவரின் கருத்து முற்றிலும் உண்மைக் கூற்று.

### தையிட்டியில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள

## விகாரையின் கட்டுமானப் பணிகளை இராணுவத் தளபதி நேரில் ஆராய்வு





வலி.வடக்கு தையிட்டியிலுள்ள தனியார் காணியொன்றில் அமைக்கப்பட்ட திஸ்ஸ ரஜ மஹா விகாரைக்கு இராணுவத் தளபதி சவேந்திர சில்வா நேற்று நேரில் வருகை தந்தார்.

பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் படைத் தலைமையகத்துக்கு நேற்றுக் காலை வருகை தந்த இராணுவத் தளபதி, விகாரைக்குச் சென்று கட்டுமானப் பணிகளை நேரில் ஆராய்ந்தார்.

வலி.வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விகாரையை அமைப்பதற்கு கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டதுடன் கட்டுமானப் பணிகளை அனுமதிப்பதில்லை என்று தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

எனினும் கடும் எதிர்ப்பையும் மீறி காங்கேசன்துறை திஸ்ஸ ரஜமஹா விகாரை அமைக்க இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவால் அடிக்கல் நடப்பட்டது.

விகாரை கட்டுமானப் பணிகளுக்கு தடை விதிக்கக் கோரி நீதிமன்றில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது.

இந்த நிலையில் விகாரையின் கட்டுமானப் பணிகள் தொடர்பில் இராணுவத் தளபதி சென்று கள ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார்.

## சாவகச்சேரி நகர்ப் பகுதியில் பொலிஸ் காவலரண் திறப்பு





(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி வணிகர் மன்றத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை சாவகச்சேரி நகர்ப் பகுதியில் பொலிஸ் காவலரண் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

வர்த்தக சங்கத் தலைவர் வே.சிவநிதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த லியனகே மற்றும் யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உஜித்த லியனகே ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்டு பொலிஸ் காவலரணைத் திறந்து வைத்தனர்.

நிகழ்வில் சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் சிவமங்கை இராமநாதன், சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன, சாவகச்சேரி நகரசபை உப தவிசாளர் பால மயூரன். வர்த்தக சங்க பிரதிநிதிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

சாவகச்சேரி பொலிஸார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாவகச்சேரி ஸ்ரார் ஹோட்டல் மற்றும் லக்சுமி ஹாட் வெயார் உரிமையாளர்களின் நிதி அனுசரணையில் வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில்இந்த நகர பொலிஸ் காவலரண் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்தக் காவலரணில் 24 மணி நேரமும் பொலிஸார் கடமையில் இருப்பர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## இந்தியாவிடமிருந்து மேலும் 36 ஆயிரம் கோடி ரூபா உதவி

உணவு மற்றும் அத்தியாவசிய மருந்துகளின் கொள்வனவுக்காகவே நூறு கோடி அமெரிக்க டொலர் (சுமார் 36 ஆயிரம் கோடி ரூபா) வழங்கப்படவுள்ளதாக இந்திய உயர் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்திய உயர் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கடன் எல்லைத்திட்டத்தின் கீழ் இலங்கைக்கு இந்தியா நீர்த்தாரை வண்டியினை வழங்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும், அதில் எவ்வித உண்மைத் தன்மையும் இல்லை எனவும் அது தெரிவித்துள்ளது.

நாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ள வெள்ளை நிற நீர்த்தாரை வண்டி பொலிஸ் விசேட அதிரடிப் படையினால், ஐக்கிய நாடுகள் அமைதிகாக்கும் பணிகளுக்காக கொண்டுவரப்பட்டது என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

# உடனடியாகப் பொதுத் தேர்தலை நடத்துவதே நெருக்கடிக்குத் தீர்வு

## நாடாளுமன்றில் கஜேந்திரகுமார் விளக்கம்



**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை இது. இந்த உரையை அவர் ஆற்றும் போது பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அன்றிரவே அது பிரகடனப்படுத்தப்பட்டது.**

கனம் அவைத்தலைவர் அவர்களே,

சர்வதேச நாணய நிதியத்துடனான தமது கலந்துரையாடலின் பின்னர், நிதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை தொடர்பான அமைச்சக அறிக்கை தொடர்பாக இன்று விவாதித்துக் கொண்டிருக்கிறோம். அந்த அறிக்கையில் நிதி அமைச்சர் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு காரணமாக இருந்திருக்குமென தாம் கருதும் விடயங்களை, தமது அரசாங்கத்தின் தவறான முடிவுகள் உள்ளடங்கலாக, பட்டியலிட முனைந்திருக்கிறார். அத்துடன் நின்றுவிடாது, வழமைபோன்று, இந்த அரசாங்கத்தின் மீது முழுப் பொறுப்பையும் சுமத்தாது, தொடர்ச்சியாக ஆட்சி செய்த முன்னைய அரசாங்கங்கள் மக்களைக் கவருவதற்காக மேற்கொண்ட பல்வேறு தவறான நடவடிக்கைகளும், ஈற்றில் இந்நிலை உருவாவதற்குக் காரணமாக அமைந்துள்ளன எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடுகிறார்.

ஆனால் யாராலும் ஒருவராலும் மறுதலிக்க முடியாத ஒருவிடயம் ஒன்றுள்ளது. உண்மையில் அதனை நிதி அமைச்சர்கூட ஒப்புக்கொண்டுள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தல் முடிந்த கையோடு நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட காலப்பகுதியில் அந்தத் தேர்தலை இலக்கு வைத்து அறிவிக்கப்பட்ட வரி நீக்கம் மற்றும் வரிவிலக்கு நடவடிக்கைகளும் இன்றைய பொருளாதார நெருக்கடி நிலை உருவாவதற்கு காரணமாக இருந்தது என்பதனை இந்த அவையில் உள்ள எவராலும் மறுதலிக்க முடியாது.

இந்த நாட்டின் பொருளாதாரம் அடிமட்டத்துக்கு சென்று, கடன் சுமை கழுத்தை நெரிக்குமளவுக்கு சென்றமைக்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்திருக்கிறது. இவையே, இலங்கைக்கான சர்வதேச சந்தைகளின் கதவுகள் மூடப்பட்டு, கடன்படுதிறன் சுட்டி கீழ் நிலைக்குச் சென்று, கடன்கள் மறுக்கப்படும் நிலையை உருவாக்கி, இந்த நாட்டை இன்றைய நிலையில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது.

இவ்வாறான நடவடிக்கைகள் இறுதியில் பாரிய பொருண்மிய நெருக்கடியை ஏற்படுத்துமென எதிர்க்கட்சி உறுப்பினர்கள், கட்சி வேறுபாடின்றி எச்சரித்திருந்த நிலையிலும் அவற்றைக் கிஞ்சித்தும் பொருட்படுத்தாது இந்த முடிவுகள் எடுக்கப்பட்டு அரசாங்கம் செயற்பட்டமையின் விளைவே, இன்று நாடு எதிர்நோக்கும் இந்தநெருக்கடியாகும்.

இந்நிலையில் கொவிட் நிலைவரமும் சேர்ந்துவிட, நாட்டின் பொருளாதாரம் முடங்கல் நிலைக்குச் சென்றது.

### வரி விலக்கால் நேர்ந்த விபரீதம்

எனக்கு நன்கு ஞாபகமிருக்கிறது. ஜனாதிபதி தேர்தலின் பின்னர் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடக்கவிருந்த போது, கொவிட் பெருந்தொற்றுக் காரணமாக பின்போடப்பட்டது. அப்போது எதிர்க் கட்சியிலிருந்தவர்கள், வடக்கு – கிழக்கிலிருந்து தெரிவானவர்கள் உள்ளடங்கலாக, இவ்வாறான வரிவிலக்கு நடவடிக்கைகள் நாட்டைபெரும் பொருண்மிய இக்கட்டுக்குள் சிக்க வைத்துவிடும் என திரும்பத் திரும்ப எச்சரிக்கை விடுத்திருந்தார்கள். அப்போது நாங்கள் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) நாடாளுமன்ற உறுப்பினர்களாக இங்கு இருக்கவில்லை. ஆனால், இந்த அரசாங்கம், குறிப்பாக ஜனாதிபதி எதிர்தரப்பினரின் ஆலோசனைகளை செவிமடுத்திருக்கவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்த பெரும்பான்மை அவர்களுக்கு அதிகாரபோதையை ஏற்படுத்தியிருந்தது.

வர்த்தக சமூகத்தினரும் பல முன்னணி பொருளியலாளர்களும் ஜனாதிபதிக்கு இதுகுறித்து பல கடிதங்கள்கூட எழுதியிருந்தார்கள். ஆனால், அவற்றுக்கு பதில்கூட அளிக்கப்பட்டிருக்கவில்லை என்பதை பொறுப்புடன் இங்கு குறிப்பிடவிரும்புகிறேன். இவ்வாறு எவரையும் மதிக்காத திமிர்த்தனமான அணுகுமுறையுடன்தான், ஜனாதிபதி விடயங்களைக் கையாண்டார். அதேவேளை, அவரது அரசாங்கம் ஒரு படி மேலே சென்று ஜனாதிபதி எதைச் செய்தாலும் கண்ணை மூடிக்கொண்டு ஆதரவு தெரிவிப்பதையே கடமையாக கொண்டிருந்தது .

### தவறை உணரும் மக்கள்

இவைதான் யதார்த்தமாக இருக்கின்ற நிலையில், இந்தக் கடும் பொருளாதார நெருக்கடிக்கு நேரடியாக முகம்கொடுக்கும் சாதாரண மக்கள், தாம் எத்தகையதொரு தவறை இழைத்து விட்டோம் என இப்போது உணரத்தொடங்கியிருக்கிறார்கள் .

இந்த ஜனாதிபதியினதும் இவ்வரசாங்கத்தினதும் முடிவுகளால் நாடு வங்குரோத்து நிலையை அடைந்திருக்கின்ற இந்த சந்தர்ப்பத்தில், இந்நாட்டின் மக்கள், இனிமேலும் இவ்வரசாங்கம் ஆட்சியில் இருக்ககூடாது எனக் கூறுகிறார்கள்.

அதை செவிமடுக்கக் கூட இந்த ஜனாதிபதியும் அரசாங்கமும் தயாராக இல்லாத போது , தமது ஜனநாயக ரீதியான எதிர்ப்பை காட்டுவதற்கு வீதிகளில் இறங்குவதை தவிர இந்த மக்களுக்கு வேறு தெரிவுகள் இருக்கவில்லை.

ஜனநாயக முறையின் படி மக்கள் ஒரு குறித்த காலத்துக்கு ஆட்சிபுரிவதற்கான ஆணையை வழங்கிய நிலையில், தாம் வழங்கிய ஆணை மீறப்பட்டதை உணரும்போது, தாம் மோசடிக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதை உணரும்போது, மக்களுக்கிருக்கும் ஒரே தெரிவு தாம் வழங்கியஆணையை மீள பெற்றுக்கொள்வது மட்டும்தான். ஆனால் இவ்வாறு தாம் வழங்கிய ஆணையை மீளப்பெற்றுக்கொள்வதற்கு சட்டரீதியாக ஏற்பாடுகள் எதுவும் இல்லாதிருப்பதால், மக்களின் முன் இருக்கும் ஒரே தெரிவு வீதிகளில் இறங்கி தாம் ஆணை வழங்கியவர்களை ஆட்சியில் இருந்து விலகுவதை உறுதிப்படுத்தும்வரை போராடுவது மட்டும்தான்.

வீதிகளில் மக்கள் இறங்கி போராடிக்கொண்டிருக்கின்ற அதே நேரம், நாங்கள் இங்கே நாடாளுமன்றத்தில் ஒருநாடகத்தை அரங்கேற்றிக் கொண்டிருகின்றோம். அது என்ன நாடகம்?

யதார்த்தம் என்னவெனில் இந்த நாடாளுமன்றம் காலாவதியாகிவிட்டது. இந்த அவை உண்மையில் நாட்டு மக்களின் பொறுப்புகளை பிரதிபலிக்கவில்லை. ஆனால், தமக்கு நம்பகத்தன்மை இருக்கின்றது எனக் காட்டிக் கொள்வதற்காக இங்கு ஒரு நாடகம் அரங்கேற்றப்படுகிறது.

### திடீரென நடக்கும் பல்டி

மூன்று, நான்கு வாரங்களுக்கு முன்னர் வரை இந்த அரசாங்கத்திற்கும் ஜனாதிபதிக்கும் கண்ணை மூடிக்கொண்டு மூர்க்கத்தனமாக ஆதரவு வழங்கிய மிக நெருக்கமான கூட்டாளிகளாக இருந்த சில அரச தரப்பு உறுப்பினர்கள், திடீரெனத் தாம் சுயாதீனமாக இயங்குகின்றார்கள் என அறிவித்து எதிர்த்தரப்பில் வந்து அமர்ந்துகொண்டார்கள்.

சரியாக ஒரு மாதத்திற்கு முன்னதாக – இதே அவையில் இந்த சுயாதீன உறுப்பினர்கள் என இப்போது தம்மைதானே அழைத்துகொள்ளும் இந்த உறுப்பினர்கள் – தாம் எதிர்த்தரப்பில் அமரவிருப்பதாக அறிவித்தபோது , இதுஒரு நாடகம் என்பதை நான் அந்த இடத்திலேயே குறிப்பிட்டிருந்தேன் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

எனக்கு முன்னர் பேசிய கௌரவ ஜகத் புஷ்பகுமார அவர்கள் இன்றைக்கு எதிர்க்கட்சிகளின் பக்கத்தில் வந்து அமர்ந்திருக்கிறார். ஆனால் அவர் இன்று இங்கு பேசியவையெல்லாம், இந்த அரசாங்கம் தொடர்ந்தும் பதவியில் இருப்பதை உறுதிப்படுத்துவதாகவே அமைந்திருந்தது.

அவர் என்ன கூறினார் என்பதைப் பாருங்கள்.

முதல் விடயமாக அவர் கூறியது ஜனாதிபதிக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணயைக் கொண்டு வருவதில் அர்த்தம் இல்லையென்றும், அதன்முலம் ஜனாதிபதியைப் பதவி நீக்கம் செய்ய முடியாதென்றும் கூறினார். ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்யவேண்டுமாயின், குற்றவியல் பிரேரணை கொண்டுவரப்பட்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படவேண்டும், ஆனால் இங்கு எதிர்த்தரப்பிடம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லை, ஆகவே ஜனாதிபதியை பதவி நீக்கம்செய்யும் இந்த முயற்சிகள் எல்லாம் நடைமுறை சாத்தியமற்றவை, மக்களை ஏமாற்றும் முயற்சி எனக் கூறியிருந்தார். இத்தனைக்கும்தான் எதிர்த் தரப்பில் இருக்கிறார் எனத் தன்னை அடையாளப்படுத்திக் கொள்கிறார்.

சரி, அப்படி ஒரு சட்டவலுவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டுவருவதாயின் அதை அரசாங்கத்துக்கெதிராகக் கொண்டுவர முடியும். அதற்கு இந்த எதிர்க்கட்சி உறுப்பினர் கூறுகிறார். ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் அடுத்த கட்ட நகர்வு எதுவெனத் தெரியாமல், அரசாங்கத்துக்கெதிரான நம்பிக்கையில்லாத் பிரேரணைக்குத் தாம் ஆதரவு தரமுடியாதெனக் கூறுகிறார். இது மிக இலாவகமாக தப்பிக்கும் செயலாகும், இப்படித்தான் கூறித் தப்பப் போகிறீர்கள் என்றால், நீங்கள் எல்லாரும் எதற்காக எதிர்த்தரப்பில் வந்து அமர்ந்திருக்கிறீர்கள்?

இவர்கள்உண்மையில்என்னகூறவிரும்புகிறார்கள் என்றால் – அவர்களின் சொற்களில் பொதிந்திருக்கும் அர்த்தம் என்னவென்றால் – மக்களின் கருத்துகளுக்கு எதுவித மதிப்பும் அளிக்கத் தேவையில்லை, இப்போது இருக்கின்ற இதே நிலைமையும் முறைமையும்தான் இனியும் தொடர வேண்டும் என்பதேயாகும் .

இந்தச் சிக்கல் நிலையில் இருந்து நாடு வெளியில் வரவேண்டுமென்றால் இங்கு ஒரு தேர்தல் நடைபெற வேண்டும். இதையே நான் கடந்த மாத அமர்விலும் வலியுறுத்தியிருந்தேன்.

ஒரு புதிய தேர்தல் நடந்து, அதை தொடர்ந்து இந்த அவையில் இருப்பவர்கள் குறித்து மக்களுக்கு நம்பிக்கை வரும் வரைக்கும், மக்கள் வீதிகளில் இருந்து கலைந்து போகப்போவதில்லை.

இப்பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு ஏதாவது முயற்சி எடுக்கவேண்டுமாயின், இந்த நாட்டை இப்படி வங்குரோத்தடையச் செய்த அதே நபர்களுடன் தான் இணைந்து வேலைசெய்யவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருப்பதுதான் இன்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முன் இருக்கின்ற மிகப் பெரிய சவால்.

### துரதிர்ஷ்ட நிலைமை

நாட்டை வங்குரோத்துக்கு உள்ளாக்கியவர்களே இந்த அவையின் மூன்றில் இரண்டு பங்கினராக இருக்கின்ற நிலையில், எந்த கட்சியாவது, இந்த நடப்பு நாடாளுமன்றத்தின் ஊடாக இந்த நிலைமைகளை ஏதாவது ஒருவழியில் சீர்செய்யலாம் என எண்ணினால், அதில் இந்த நிலைமைக்கு காரணமான அரச தரப்பின் அரைவாசிக்கும் அதிகமானோரோடு இணைந்து வேலை செய்ய வேண்டிய நிலை உருவாகும். அப்படி நாட்டை வங்குரோத்து அடையச் செய்தவர்களுடன் இணைந்தே, இந்த வங்குரோத்து நிலையை தீர்ப்பது என்பது எப்படிச் சாத்தியமாகும்?

எனவே, ஒரு தேர்தல் நடத்தப்பட்டு புதியதொரு மக்கள் ஆணை பெறப்படுவதன் மூலமே இப்பிரச்சினையில் இருந்து மீளெழ முடியும். அதற்குத்தான் இப்போது நாம் முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

எவ்வளவு தூரத்துக்கு நீங்கள் தேர்தல்களை பிற்போடுகிறீர்களோ, அவ்வளவிற்கு இன்று நாம் எதிர்கொண்டிருக்கின்ற இந்த அரசியல் நெருக்கடி, மேலும் மோசமான நிலையை எட்டும். இந்த அவையானது தற்போது மக்களின் விருப்புகளை பிரதிபலிக்காத, நம்பக்கத்தன்மையை இழந்த ஒரு அவையாக இயங்குவதால், இந்த அரசியல் நெருக்கடி, ஒரு கலவரமாகவும்மாறக் கூடும். கலவரங்கள் ஏற்படும் போது என்ன நடக்கும்?

(06ஆம் பக்கம் பார்க்க)

# உடனடியாகப் பொதுத் தேர்தலை ...



(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

எங்களுக்கு இன்று ஒரு ஜனாதிபதி வாய்த்திருக்கிறார், அவர் இந்த அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியிலும், இராணுவ அதிகாரிகளை அமைச்சரவை அதிகாரிகளாகவும் செயலாளர்களாகவும் தொடர்ந்தும் நியமித்து அதில் மகிழ்ச்சியை கண்டுகொண்டிருக்கிறார். இப்படியான ஒரு பின்புலத்தில், மக்களின் குரல்கள் செவிமடுக்கப்படாத விசனத்தில் மக்கள் அடுத்த நடவடிக்கைகளில் இறங்கினால், என்ன செய்வீர்கள்?

நீங்கள்இராணுவத்தை மக்கள் மேல் கட்டவிழ்த்து விடுவீர்கள். அதுதான் நடைபெறப்போகிறது.

அத்தகைய ஒரு தருணத்தை நோக்கித்தான் இந்த ஜனாதிபதியும் அரசாங்கமும் விடயங்களை நகர்த்தி வருகிறார்கள். இந்நிலையில் இங்கு அவையில் எதிர்த்தரப்பில் இருக்கின்ற ஒவ்வொரு உறுப்பினர்களும் தங்களது நம்பகத்தன்மையை தக்கவைக்க வேண்டுமாயின், இந்த நாடாளுமன்றத்தை கலைப்பதற்கு ஆதரவு கொடுக்கவேண்டும். அதற்கான மூன்றில் இரண்டு பெரும்பான்மையை எமக்குத் தாருங்கள், அப்போதுதான் நாம் ஒரு நாடாளுமன்றத் தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதியைக் கோரமுடியும்.

ஏன் நாடாளுமன்றத் தேர்தல் வேண்டும் எனக் கேட்கிறேன் என்பதற்கு இன்னொரு காரணம். ஏதோ ஒரு காரணத்துக்காக ஜனாதிபதி இன்றோ நாளையோ ராஜினாமா செய்கிறார் என வைத்துக்கொண்டால், இந்த நடப்பு நாடாளுமன்றம்தான் இன்னொரு ஜனாதிபதியைத் தேர்வு செய்ய வேண்டியிருக்கும்.

இந்நாடாளுமன்றமே மக்களின் நம்பகத்தன்மையை இழந்துள்ள நிலையில், காலாவதியான ஒரு நாடாளுமன்றம் எப்படி தம்முள் இருந்து ஒருவரை ஜனாதிபதியைத் தெரிவு செய்வது?

எனவே புதிய தேர்தல் ஒன்றின் மூலம் புதிய மக்கள் ஆணை பெறப்பட வேண்டும். இது தான் எமது கட்சியின் நிலைப்பாடு. இவ்விடயத்திற்கு நாம் எமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம்.

எதிர்தரப்பில் உள்ளவர்களுக்கு இதனை நாம் சவாலாகவே விடுகிறோம். புஷ்பகுமார போன்றவர்களுக்கு சவாலாக விடுகிறோம். அவர்கள் நம்பகத்தன்மை கொண்டவர்களாக இருப்பின் இந்த அவையைக் கலைப்பதற்கு ஆதரவு வழங்குங்கள். அதற்காக மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவைத் திரட்டுவீர்களானால், அது ஜனாதிபதியைப் பதவியிலிருந்து இறக்குவதற்கும் வழிவகுக்கும். இதனை நீங்கள் செய்யத் தவறுவீர்களானால் நீங்கள் இந்நிலைக்கு பொறுப்பாளிகளாவீர்கள். இதற்கான பொறுப்புக்கூறவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவீர்கள்.

**மாற்றம் வேண்டும்**

இன்று இந்த நாட்டு மக்கள் அனைவரும் ஒரு தீர்க்கமான ஆட்சி கட்டமைப்பு மாற்றம் ஏற்படவேண்டும் என்பதையே விரும்புகின்றார்கள். இதையே இன்று காலை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது டுவிட்டர் பக்கத்திலும் தெரிவித்திருந்தார். தீர்க்கமானதொரு மாற்றத்தையே அவர் கூறுகிறார் என்று நம்புகிறேன். ஏனெனில் இந்த நாட்டின் முழுக் கட்டமைப்புமே ஒரு தோல்வியடைந்த, செயலிழந்த கட்டமைப்பாக மாறியுள்ளதென்பதை அரசியல்வாதிகளும் நாட்டு மக்களும் உணர்ந்துள்ளார்கள்.

இதனையே எதிர்த்தரப்பில் இருக்கும் தமிழ் கட்சிகள் இன்று மட்டுமல்ல, எப்போதும் கூறிவருகிறார்கள். இந்த நடப்பு அவையில் மட்டுமல்ல தொடர்ச்சியாக 70 ஆண்டுகளாகஒவ்வொருநாடாளுமன்றஅவைகளிலும் இந்த நாட்டின் கட்டமைப்பு மாற வேண்டும் என்பதையே மீளவும் மீளவும் தெரிவித்து வருகின்றார்கள். இன்று நடைமுறையில் உள்ள ஆட்சிக் கட்டமைப்பானது ஒரு போதும் சீராக செயற்படப் போவதில்லை. ஏனெனில், இந்நாட்டு மக்களில் ஒருபகுதியினர் இக்கட்டமைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழர்கள் இக்கட்டமைப்பை நிராகரித்துவிட்டார்கள். முஸ்லிம்களும் இந்த ஆட்சிக் கட்டமைப்பை நிராகரிக்கும் குரலை தற்போது அதிகளவில் ஒலிக்கத் தொடங்கியிருக்கிறார்கள் .

ஏனெனில், இந்த நாட்டினுடைய சிங்கள பேரினவாதத்தின் பேரில், அல்லது பாதுகாப்பின் பேரில் ஆட்சியிலிருக்கும் அரசாங்கங்கள் யாரை இலக்கு வைக்கிறார்களோ அவர்களை இக்கட்டமைப்பினால் பாதுகாக்கவே முடியாது. பல்வேறு காரணங்களினால் இக்கட்டமைப்பு தோல்வியடைந்திருக்கிறது. இக்கட்டமைப்பு மாற்றப்பட வேண்டுமானால், எவ்வாறு மாற்றப்பட வேண்டும்?

**13 ஆவது திருத்த நடைமுறையாக்கம் இனிமேல் எப்படிச் சாத்தியமாகும்?**

சிலவாரங்களுக்கு முன்னர் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தான் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தப் போகிறார் எனக் கூறியிருக்கிறார்.

பதின்மூன்றாம்திருத்தச்சட்டத்தைஅமுல்படுத்துவது என்றால் என்ன? கடந்த முப்பத்திநான்கு வருடமாக இருக்கும் பதின்மூன்றாம் திருத்தச் சட்டத்தில் எதனை அமுல்படுத்தப் போகிறீர்கள்?

இதுவரை அமுல்படுத்தாதவற்றை அமுல்படுத்தப்போகிறீர்களா?

அது உங்களால் முடியாது. பதின்மூன்றாம் திருத்தச்சட்டம் ஒற்றையாட்சி முறைமையின் கீழ் உள்ளது. அது ஒற்றையாட்சிமுறையில் உள்ளவரை உங்களால் அதிகாரப் பகிர்வினை ஏற்படுத்த முடியாது.

உயர்நீதிமன்றம் ஒரு தடவையல்ல முப்பது தடவைகள் இதனை உறுதிப்படுத்தியுள்ளது. அதிகாரப் பகிர்வினை முறையாக அமுல்படுத்துவதானால், பதின்மூன்றாம் திருத்தச் சட்டத்தினால் முடியாது. அரச கட்டமைப்பானது மாற்றப்படவேண்டும்.

அரச கட்டமைப்பை மாற்றுவது என்றால் என்ன? ஏற்கனவே இருக்கும் ஒற்றையாட்சி முறையிலிருந்து நீங்கள் விலகி, புதியதொரு கட்டமைப்புக்கு செல்ல வேண்டும்.

இன்று இந்த அரசியல் கட்டமைப்பானது அரசாங்கத்தினுடைய சொந்த இனமாகிய சிங்கள இனத்தை பாதிப்புக்குள்ளாகி வருகிறது. தங்கள் கண்களுக்கு முன்னாலேயே தாங்கள், தங்கள் தலைவர்களால் பொய்கள் சொல்லப்பட்டு ஏமாற்றப்பட்டு, அழிக்கப்பட்டு வருகின்ற அவலத்தை இன்று சிங்கள மக்கள் எதிர்கொண்டுவருகிறார்கள். இது தவறவிடக்கூடாத முக்கியமான ஒரு தருணம் என நான் கருதுகிறேன். சர்வதேச நாணய நிதியம் தொடர்பாகவும், இன்றைய பொருண்மிய நெருக்கடி தொடர்பானதுமான விவாதத்தில், நான் இவ்விடயத்தை வலியுறுத்திக் கூறுவதற்கு காரணமிருக்கிறது.

நான் இவ்வகையில் பலதடைவைகள் கூறியது போன்று, இப்போது முதற் தடவையாக இக்காரணங்களால் ஒருவாய்ப்பு உருவாகியிருக்கிறது. சிங்கள மக்கள் இன்று தங்களது தலைவர்கள் மீது நம்பிக்கையிழந்து விட்டார்கள்.

இதனை என்னை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக ஒரு பொய்யாக நான் கூறவில்லை.

ஆனால், இது முக்கியமானதொரு தருணம். தமது தலைவர்கள் இந்நாட்டை அழிவிற்கு கொண்டுசென்று விட்டார்கள் என அவர்கள் உணர தொடங்கியிருக்கிறார்கள்.

இன்றைக்கு யுத்தம் நடக்கவில்லை. அப்படியாயின் கடந்த பதின்மூன்று வருடகாலத்தில் இந்த நாட்டை சீர்ப்படுத்தி உறுதி நிலைக்கு நீங்கள் கொண்டு சென்றிருக்க வேண்டும். ஆனால் நீங்கள் நாட்டைப் படுகுழிக்குள் கொண்டு சென்றிருக்கிறீர்கள். இன்றைக்கு நீங்கள் வங்குரோத்து நிலையை அடைந்திருக்கிறீர்கள். முதற் தடவையாக அவர்களது தலைவர்களை நோக்கி சிங்கள மக்கள் கேள்வியெழுப்பத் தொடங்கியிருக்கிறார்கள். தமது தலைவர்கள் எடுத்த தவறான முடிவுகளால் அவர்கள் மீது கோபத்தில் உள்ளனர். இந்நிலையில் நல்ல வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாக நான் கூறுகிறேன்.

நாங்கள் சிங்கள பொதுமக்களை இது பற்றிச் சிந்திக்குமாறு கேட்கிறோம்.

தம் சொந்த இனத்திடமே பொய் கூறி, அவர்களை ஏமாற்றி அவலநிலைக்கு உள்ளாக்கியிருக்கும் தமது தலைவர்கள், எப்படிப்பட்டவர்கள் என்பதனை இந்த தருணத்தில் உணர்ந்து கொண்டிருக்கும் சிங்கள மக்கள், இந்த நாட்டின் மற்றைய தரப்பினராகிய தமிழ் மக்கள் தொடர்பில் சிங்களத் தலைவர்கள் கூறிய விடயங்களில் உண்மைத்தன்மை இருக்குமா என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும். சமஷ்டி முறைமை என்பது பிரிவினைக்கு வழிவகுக்கும் என்று எதுவித கூச்சமுமில்லாமல் பொய் கூறி ஏமாற்றி வந்திருக்கிறார்கள். இன்றைக்கும் அதையே கூறிவருகிறார்கள். எனவே தான் சொல்கிறேன் இக்கேள்விகளை சிங்கள மக்கள் தங்கள் தலைவர்களிடம் கேட்கவேண்டும்.

இன்றைக்கு இந்த நாடு பாதுகாப்புக்கு பாதீட்டில் 19 சதவீதத்தைச் செலவிடுகிறது. அதில் 13 சதவீதம் நேரடியாக இராணுவத்திற்கு ஒதுக்கப்படுகின்றது . இது வருடாந்தம் இரண்டு சதவீதத்தால் உயர்த்தப்படவிருக்கிறது. இது யுத்தத்திற்கு பின்னரான நிலைமை.

**இராணுவத்துக்கு இத்துணை செலவு செய்வது எதற்காக?**

இந்த நாட்டில் கல்விக்கும் சுகாதாரத்துக்குமாக சேர்த்து பத்து சதவீதத்துக்கும் குறைவாகவே வரவு – செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கப்படுகின்ற போது, யுத்தம் முடிவடைந்த பின்னர் கூட, பாதுகாப்புச் செலவினத்துக்கென 19 வீதம் ஒதுக்கப்பட்டு வருகிறது.

கல்விக்கும் சுகாதரத்துக்கும் ஒதுக்கும் பணத்தை விட மிகப்பெரிய பங்கை இன்றைய இக்கட்டான நிலையில் கூட, இராணுவத்திற்கென ஒதுக்கும் இந்தக் கட்டமைப்பு, ஒரு நிலைபேறான வளர்ச்சியைக் கொண்டு வரும் என எவராலும் எதிர்பார்க்க முடியுமா?

போர் முடிந்து இத்தனை காலத்துக்கு பின்னரும் நாட்டையே பிடுங்கி தின்கிற அளவுக்கு ஒரு பூதமாக வளர்ந்து வருகின்ற இராணுவக்கட்டமைப்பை பேண வேண்டிய தேவை என்ன என்பதை சிங்கள மக்கள் தங்களைத் தாங்களே கேள்வி கேட்கவேண்டிய ஒரு முக்கியமான தருணம் இது .

இன்று கனிந்திருக்கிற இந்த சந்தர்ப்பத்தை தவறவிடவே கூடாது.

தோல்வியடைந்திருக்கிற இந்த நாட்டின் கட்டமைப்பை மாற்றி, இந்த ஒற்றையாட்சி கட்டமைப்பை மாற்றி, இந்த அழகிய தீவு தனியே சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் உரித்தானதல்ல என்பதை ஏற்று , இது சிங்களவர்கள். தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள், பறங்கியர்கள் என அனைவருக்கும் உரித்தானது என்பதை ஏற்று, இந்த தீவில் சிங்கள மொழி பேசும் தேசமும் தமிழ் பேசும் தேசமும் இருக்கின்றன என்பதை அங்கீகரிக்கும் ஒரு சமஷ்டிக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும். இல்லாவிடில் இந்த நாட்டைஒருபோதும் அழிவுப் பாதையில் இருந்து காப்பாற்றவே முடியாது போய்விடும் .

சாதாரண சிங்களப் பொது மக்கள் மேற்குறித்த விடயங்கள் தொடர்பில் இனியும் சிந்திக்காது விடின், இந்த மாற்றங்களை இன்று நீங்கள் நிகழ்த்தாது விடின், இந்த நாட்டின் பாதுகாப்பு செலவினம் மேலும்மேலும் அதிகரித்து, நாட்டையே முழுமையாக அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும்.

இன்றாவது சிங்களப் பொதுமக்கள் தமது தலைவர்களுடைய உண்மை நிலையினை அறிந்து கொண்டதன் பிற்பாடு மேற்குறித்த கேள்வியை கேட்டு ஒரு சரியான முடிவை நீங்கள் எடுக்காது விடின், நீங்கள் கூட இனவாதப் பாதையில் செல்வதாகவே நாம் முடிவெடுக்க வேண்டிவரும்.

சந்திரிகா பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலத்தில் எனது தந்தையார் படுகொலை செய்யப்பட்டபோது, வெளிநாடுகளில் வாழும் எமது உறவினர்கள் என்னையும் எனது குடும்பத்தினரையும் வெளிநாடுகளுக்கு வந்து புகலிடம் கோருமாறும் அங்கு வந்து குடியேறுமாறும் வற்புறுத்தினார்கள். இக்கட்டமைப்பு மாற்றமடைவது என்பது மிக மிக அரிதான விடயம் எனத் தெரிந்திருந்தும், எனது தந்தையார் படுகொலை செய்யப்பட்ட நிலையிலும் எனது உள்ளுணர்வு ஒன்றைச் சொல்லியது, இது தலைவர்களின் தவறு. சாதாரண மக்களுக்கு உண்மை கூறப்படவில்லை, என்றைக்காவது ஒரு நாள் இந்த உண்மைகளை அறியக்கூடிய வாய்ப்பு அவர்களுக்கு கிட்டும் பட்சத்தில் அவர்கள் மாற்றமடைவார்கள். சரியான முடிவுகளை எடுப்பார்கள் என என் உள்ளுணர்வு கூறியதால், நான் நாட்டை விட்டு அகலும் முடிவை அன்று எடுக்கவில்லை.

நான் விரும்பியிருந்த அந்த அரிய தருணம் இப்போது கனிந்து வந்திருக்கிறது.

**இனியும் கண் திறக்காவிடில்.....**

இத்தருணத்திலாவது –

சிங்கள மக்கள் தங்களது கண்களைத் திறக்காவிடில் – இலங்கை தனித்து சிங்கள மக்களுக்கு என்றில்லாமல், தமிழர்கள், முஸ்லிம்கள், பறங்கியர்கள் என அனைவருக்குமானது என்பதனை ஏற்றுக்கொள்ளாமலும், சிங்களம் பேசும் தேசமும், தமிழ்பேசும் தேசமும் இந்நாட்டில் இருப்பதனை ஏற்றுக்கொள்ளாவிடில் –

அதற்கேற்ற முறையில் அரசகட்டமைப்பு சமஷ்டி முறைக்கு மாற்றப்படாவிடில் –

இந்நாடு தோல்வியடைந்த நாடாகவே தொடர்ந்தும் இருக்கும். இவற்றை ஏற்றுக்கொள்ளாவிடத்து நீங்கள் பாதுகாப்புச் செலவினங்களைத் தொடர்ந்தும் அதிகரிக்கவே வேண்டியிருக்கும். என்பதனால் நாடு தொடர்ந்தும் தோல்வியடையும். புதிய தலைமுறை தமிழ்ச்சமூகம், புதிய தலைமுறை புலம்பெயர் சமூகம், புதிய வழிமுறைகளின் மூலம் இவ்வரசினை தோல்வியுறச் செய்ய எத்தனிக்கும்.

ஏனெனில், இந்த அரச கட்டமைப்பு தங்களுக்கு எதிரானதாக அமைந்திருப்பதாகவே அவர்கள் கருதுகிறார்கள்.

இவ்வளவு காலமும் சிங்களத் தலைவர்களே இந்த நிலைக்கு காரணமானவர்கள் என்று கூறி வந்தோம். இன்றைக்கு தாங்கள் தங்களது தலைவர்களால் ஏமாற்றப்பட்டுள்ளதனை நன்கு உணர்ந்திருக்கிற சிங்கள மக்கள், தமிழர்கள் மீதுதான் தவறு இருந்து வந்திருக்கிறதாகக் கூறமுடியாது. அவ்வாறு அவர்கள் கூறுவார்களேயானால், துரதிர்ஷ்டவசமாக அங்கும் இனவாதம் இருப்பதாகவே கருதவேண்டியிருக்கும்.

ஆனால், கொழும்பிலே பிறந்து அங்கேயே படித்து வளர்ந்து, மிக நெருக்கமான சிங்கள நண்பர்களைக் கொண்டவன் என்கிற வகையில், நான் மேலே சொன்னதை (நீங்களும் இனவாதிகள்தான் எனமுடிவெடுக்க வேண்டிவரும் என்பதை ) பொய்யாக்குவீர்கள் எனும் நம்பிக்கை எனக்கு உண்டு என்பதையும் நான் இந்த இடத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# காணாமல் போன உறவுகளைத் தேடி ஏமாற்றத்தோடு விடைபெற்ற அன்னை



"சாகுறதுக்கு இடையில என்ட பிள்ளைகளக் கண்ணால காணனும். கடைசி வரைக்கும் நான் சாகும் மட்டும் மரண சான்றிதழை நான் வாங்க மாட்டேன் என உறுதியாக இருந்த தங்கராசா செல்வராணி, அதே நிலைப்பாட்டில் இன்று இந்த உலகை விட்டு விடை பெற்றுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் 2009 ஆம் ஆண்டு முடிவுக்கு கொண்டு வரப்பட்ட போதிலும், அதன் பாதிப்புகள் இன்று வரை அவ்வாறே காணப்படுகின்றன.

யுத்த காலப் பகுதியில் காணாமல் போன உறவுகளைத் தேடி, இன்றும் இலங்கையில் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் காணாமல் போனோரை தேடும் தேடல், இன்றும் தொடர்கின்றது.

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள், இன்றும் தமது உறவுகளை தேடி போராடி வருகின்ற நிலையில், போராட்டங்களில் ஈடுபட்ட பலர், போராட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

வயது முதிர்வு காரணமாக ஏற்படும் நோய்கள், உடலில் வலுவின்மை போன்ற காரணங்களில் பெற்றோர் போராட முடியாத நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

அதேவேளை, தமது உறவுகளை தேடி போராட்டங்களை ஆரம்பித்து, வீதிகளில் போராடிப் போராடி, இறுதி வரை காணாமல் போன உறவுகளை கண்டறிய முடியாது, இன்று வரை 108 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர் எனக் காணாமல் போனோரின் உறவுகள் சங்கம் தெரிவிக்கின்றது.

இவ்வாறு போராடிய வயது முதிர்ந்த நிலையில், இறுதி வரை காணாமல் போன தனது உறவுகளை கண்டு பிடிக்க முடியாத நிலையில், மற்றுமொரு தாய் உயிரிழந்துள்ளார்.

வவுனியா – செட்டிக்குளம் பகுதியைச் சேர்ந்த 70 வயதான தங்கராசா செல்வராணியே இவ்வாறு இந்த உலகை விட்டு விடை பெற்றுள்ளார்.

2008 ஆம் ஆண்டு யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் தமது வீட்டிலிருந்து அனைத்து ஆண்களையும் தொலைத்த இந்த பெண், அவர்களை இறுதி வரை தேடி, தனது தேடலில் தோல்வியை சந்தித்து விடை பெற்றுள்ளார்.

தங்கராசா செல்வராணி, தனது மகன், பேரன் மற்றும் மருமகன் ஆகியோரையே இவ்வாறு தொலைத்துள்ளார்.

தனது மருமகனை இராணுவத்தினர் நேரடியாகவே வீட்டிற்கு வந்து அழைத்து சென்ற நிலையில், அவர் காணாமல் போயுள்ள நிலையில் செல்வராணி கடந்த மார்ச் மாதம் வழங்கிய பேட்டியில் தெரிவித்திருந்தார்.

அதேபோன்று, தனது மகன் மற்றும் பேரன் ஆகியோர் வீட்டிற்கு அருகிலுள்ள ஆற்றிற்குச் சென்ற வேளையில், திடீரெனக் காணாமல் போயினர் எனவும் அவர் அன்று கூறினார்.

தனது மகன் மற்றும் பேரன் ஆகியோர் காணாமல் போன இடத்தில், இலங்கை பாதுகாப்பு பிரிவினர் நடமாடியமைக்கான அடையாளங்கள் காணப்பட்டமையையும் அவர் நினைவூட்டினார்.

2008 ஆம் ஆண்டு முதல் தொடங்கிய தேடலை செல்வராணி தனது உயிர் பிரியும் இறுதி நொடி வரைத் தொடர்ந்திருந்தார்.

எனினும், கடந்த மார்ச் மாதத்தை அண்மித்த காலப் பகுதியில் ஏற்பட்ட திடீர் சுகயீனம் காரணமாக, செல்வராணி ஒரே இடத்திலேயே முடங்கியிருந்தார்.

வயது முதிர்வு மற்றும் நோய் தாக்கம் காரணமாக வீட்டிற்குள்ளேயே முடங்க வேண்டிய கட்டாயத்திற்கு அவர் தள்ளப்பட்டார்.

தனது உறவுகள் காணாமல் போன தருணம் முதல் போராட ஆரம்பித்த இவர், கடந்த மார்ச் மாதத்தை அண்மித்த காலம் வரை போராடி வந்துள்ளார்.

செல்வராணி, கடந்த மார்ச் மாதம் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

"சாகுறதுக்கு இடையில என்ட பிள்ளைகள கண்ணால காணனும். ஒரு பிள்ளையும் இல்லாம இன்றைக்கு இருக்குறேன். போகாத இடமும் இல்ல. கூப்பிடாத யாரும் இல்ல. ஒருக்கா எங்கட பிள்ளைகள என்ன ஏதுனு பாத்துருவோனு நாங்களும் படாத கஷ்டம் முழுக்கப் பட்டு, இன்னும்தான் ஒரு முடிவும் இல்லையே. சர்வதேச சமூகத்தைக் கூப்பிட்டு, கூப்பிட்டு மண்டாடிக் கொண்டிருக்கோம். ஒரு முடிவும் எங்களுக்கு கிடைக்குது இல்லையே..." என கண்ணீர் மல்க செல்வராணி கூறியிருந்தார்.

காணாமல் போனோரின் உறவுகளுக்கு நட்டஈடு வழங்குவதாகவும், மரண சான்றிதழ் வழங்குவதாகவும் இலங்கை அரசாங்கம் வெளியிட்ட அறிவிப்புக் குறித்தும் செல்வராணி கருத்து வெளியிட்டார்.

"கடைசி வரைக்கும் நான் சாகும் மட்டும் மரணச் சான்றிதழை நான் வாங்க மாட்டேன். நான் வேண்ட மாட்டேன். எனக்கு பிள்ளைகள்தான் தேவை. என்னன்டு அவங்க மரண சான்றிதழ் தருவாங்க? எங்கட பிள்ளைகள யார் கொண்டு போன, எவர் கொண்டு போன, என்ன நடந்தது என்டு யாராச்சு பார்த்தா எங்களுக்கு மரண சான்றிதழ் தர போறாங்க? பிள்ளைகள வச்சுக் கொண்டுதான் தாறாங்களோ? வைக்காம தாறாங்களோ? யார் கண்டது? மரணச் சான்றிதழுக்கு நான் கையொப்பம் வைக்க மாட்டேன்" என அவர் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறு தனது உறவுகளை கண்டுபிடிக்க வேண்டும் என்ற வைராக்கியத்துடன் தனது வாழ் நாள்களை கடத்திய செல்வராணி, இந்த உலகை விட்டு கடந்த மே முதலாம் திகதி பிரிந்தார்.

அவரது இறுதிக் கிரியைகள் அண்மையில் வவுனியா – செட்டிக்குளம் பகுதியில் இடம்பெற்றன.

யுத்த காலத்தில் காணாமல் போன உறவுகளை தேடி இன்றும் போராட்டம் நடத்தப்பட்டு வருகின்ற நிலையில், பலர் இந்த போராட்டத்தில் வெற்றி காணாது உயிரிழக்கும் சம்பவங்கள் கடந்த காலங்களில் தொடர்ந்தும் பதிவாகி வருகின்றன.

காணாமல் போனோர் விவகாரம், இவ்வாறு உயிர் துறப்பவர்களுக்கு இறுதி நொடி வரை விடை கிடைக்காத கேள்வியாகவே அமைகின்றது.

**(நன்றி: பிபிசி தமிழ்)**

# நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறித்து 3 மகாநாயக்கர்கள் விசனம் தெரிவிப்பு

சர்வகட்சி பொது இடைக்கால நிர்வாகத்தை உருவாக்குவதற்கு முயற்சி எடுக்குமாறு ஜனாதிபதி, பிரதமர் உட்பட அனைத்து சட்டமியற்றுபவர்களுக்கும் சியாம், அமரபுர மற்றும் ராமன்ன நிகாயா பிரிவுகளின் மகா நாயக்க தேரர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இரண்டு பக்க அறிக்கையொன்றில், இலங்கை மக்களைப் பாதித்துள்ள சமூக – பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகளில் தலையிட்டு தீர்வு காண நாடாளுமன்றத்தில் உள்ள சட்டமியற்றுபவர்கள் தவறியமை குறித்து மகாநாயக்க தேரர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

மக்கள் நெருக்கடியில் உள்ள நேரத்தில், நாடாளுமன்றத்தில் இருப்பவர்கள் தங்கள் அரசியல் கட்சிகளின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மட்டுமே பொது நிதியை வீணடித்து வருகின்றனர் எனவும், எனவே மக்கள் ஆணையை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு நம்பகத்தன்மையை அவர்கள் கொண்டிருக்கிறார்களா என்பது கவலைக்குரியது என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

குறுகிய அரசியல் இலாபத்தை அடைவதற்காக சில மக்கள் பிரதிநிதிகள் முன்வைக்கும் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகள் அவர்களின் அரசியல் முதிர்ச்சியற்ற தன்மையை சித்திரிக்கின்றன எனவும், அவர்களுக்கு இன்றைய பிரச்சினைகள் குறித்து எந்த உணர்வும் இல்லை எனவும் அவர்கள் குறை கூறியுள்ளனர்.

# 240 கிலோ ஹெரோயினுடன் ஆழ் கடலில் கப்பல் சிக்கியது



## ஏழு வெளிநாட்டவர்களும் கைது

இலங்கைக்கு தெற்கே 630 கடல் மைல் தொலைவில் உள்ள கடற்பரப்பில் சந்தேகத்திற்கிடமான கப்பல் ஒன்றை இலங்கை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கடற்படை மற்றும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட கூட்டு நடவடிக்கையின் போதுஇந்தக் கப்பல் கைப்பற்றப்பட்டுள்ளது.

கப்பலில் இருந்த 07 வெளிநாட்டவர்களுடன் 240 கிலோ கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாக கடற்படை தெரிவித்துள்ளது.

# நூல்கள் கையளிக்கும் நிகழ்வு




புரவலர் புத்தகப் பூங்காவின் 41 ஆவது வெளியீடான, மறைந்த கவிஞர் (மர்ஹூம்) கலாபூஷணம் எம்.பி. சிறாஜ்டீனின் முதலாவது கவிதை தொகுதியான இன்னும் திருந்தவில்லை நூல்கள் கையளிக்கும் நிகழ்வு புரவலரின் இல்லத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்ற போது நூலாசிரியரின் புதல்வர் எஸ்.எம். றம்சியிடம் புரவலர் நூல்களை வழங்கி வைப்பதையும் தினகரன் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர், தொகுப்பாசிரியர் கவிஞர், மேமன் கவியும் உடன் காணப்படுகின்றனர்.

# நுட்பியல் அவத்தை

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)



'அமெரிக்காவில் கருக்கலைப்பு சட்டவிரோதமானது' என்ற நீதிமன்றத் தீர்ப்பிற்கு எதிராக தொடர் போராட்டங்கள் நடைபெறுகின்றன. இலங்கையில் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்கள் நாளாந்தம் தீவிரமடைந்துவருகின்றன. மூன்று இடங்களில் தொடர்போராட்டங்கள் நடக்கின்றன. தினமும் இதில் பலர் இணைந்துகொண்டிருக்கின்றார்கள். இந்தப்போராட்டத்தில் கைபேசிகள் குறிப்பாக ஸ்மார்ட் போன்கள் முக்கிய பங்கு வகிக்ககின்றன.

ஒருவர் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடும்போது அவருக்கு முக்கிய கருவியாக இருக்கப்போவது அவரது ஸ்மார்ட் போன் இதனைப்பாதுகாப்பது மிகமுக்கியமானதாகிறது.

ஒருவர் எதிர்ப்பு போராட்ட களத்தில் கலந்து கொள்ள திட்டமிட்டால், ஃபோன் ஒரு இன்றியமையாத கருவியாகும். தகவலை அணுகவும், சகாக்களுடன் ஒழுங்கமைக்கவும், நிகழ்வுகளை ஆவணப்படுத்தவும் மற்றவர்களுக்கு உதவுவதற்கும் ஸ்மார்ட்போனை சார்ந்திருக்க வேண்டும். இந்த வேளையில் டிஜிற்றல் பாதுகாப்பு பற்றி அறிந் திருப்பது மிக அவசியமாகிறது. இது எதிர்ப்பிற்கான தயார்நிலையை மேம்படுத்த உதவுவது மட்டுமல்லாமல், இணைந்து செயற்படும் சமூகங்கள் மற்றும் நண்பர்களின் டிஜிற்றல் பாதுகாப்பிற்கும் உதவமுடியும்.

முதலில் ஒருவர் போராட்டத்தில் ஈடுபடும்போது ஸ்மார்ட்போனைப் பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய அபாயங்களை விரைவாகப் பார்க்கலாம்.

### தொலைபேசியை தவறவிடலாம்

ஸ்மார்ட்போனை பொலிஸார் பறிமுதல் செய்யலாம்.

மொபைல் நெட்வொர்க் தோல்விகள் மற்றும் அதிக சுமை காரணமாக சேவையில் இடையூறு. இது வேண்டுமென்றே குறுக்கீடு அல்லது அதிக எண்ணிக்கையிலான மக்கள் மொபைல் ஆபரேட்டர்களின் நெட்வொர்க் உள்கட்டமைப்பை ஓவர்லோட் செய்வதால் ஏற்படலாம்.

ஸ்மார்ட்போன் கண்காணிக்கப்படலாம்

சில மொபைல் சேவைகளை சீர்குலைத்தல் – அழைப்புகள் மற்றும் எஸ்எம்எஸ் வழங்குவதைத் தடுக்கலாம்.

வாக்கி – டாக்கிகள், வானொலி மற்றும் பிற காம்கள் ரேடியோ சேவை மூலம் தகவல்தொடர்புகளை கண்காணித்தல்.

டுவிட்டர் போன்ற பிரபலமான சமூக ஊடகத் தளங்களுக்கான அணுகலைத் தடுப்பது போன்ற இணையச் சேவைகளில் குறுக்கிடப்படலாம்.

வாட்ஸ்அப் போன்ற செய்தி மற்றும் குரல் சேவைகளை சீர்குலைக்கலாம்.

மக்களைக் கண்காணித்து அடையாளம் காண போராட்டத்திற்கு அருகிலுள்ள செல்போன் டவர்களில் இருந்து பதிவுகளை மீட்டெடுக்கலாம்.

மேலேசொன்னது போன்ற பலவேறு நெருக்கடிகள் ஏற்படலாம்.

ஆகவே ஒருவர் போராட்டத்தில் கலந்து கொள்வதற்கு முன், நினைவில் வைத்துக்கொள்ள வேண்டியபல விடயங்கள் உள்ளன.

எதிர்ப்புப் போராட்டத்தில் பங்குகொள்ளும் ஒருவர் ஸ்மார்ட்போனின் திரைப் பூட்டு இயக்கப்பட்டிருப்பதை உறுதிசெய்யவும். குறைந்தபட்சம் 6 – இலக்க PIN குறியீட்டைப் பயன்படுத்தவும் அல்லது கடவுச்சொற்றொடரைப் பயன்படுத்தவும். கைரேகை அல்லது முக ஐடி போன்ற பயோமெட்ரிக் அன்லாக்கைப் பயன்படுத்தினால், அது உங்கள் மொபைலை வலுக்கட்டாயமாகத் திறக்கப் பயன்படும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும். அதனால் அதனைத் தவிர்க்கவும்.

ஸ்மார்ட்போனின் காப்புப் பிரதி எடுக்கவும், தொடர்புகள், மீடியா மற்றும் பிற தனிப்பட்ட உள்ளடக்கம் உட்பட அனைத்து உள்ளடக்கத்தையும் காப்புப் பிரதி எடுக்கவும். செய்தியிடல் பயன்பாடுகளையும் காப்புப் பிரதி எடுக்க நினைவில்




கொள்ளுங்கள்.

மேலதிகமான மொபைல் பற்றரி அல்லது முழுமையாக சார்ஜ் செய்யப்பட்ட பவர் பேங்கை வைத்துக்கொள்ள வேண்டும்.

அவசரத் தொடர்பு அல்லது வழக்கறிஞரின் எண் போன்ற முக்கியமான தகவல்களை ஒரு தாளில் எழுதவும்.

மொபைல்போன் கிரெடிட்டை டாப் அப் செய்து, போதுமான டேட்டா கொடுப்பனவு உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

எதிர்ப்பு நடவடிக்கையின் போது பயன்படுத்த திட்டமிட்டுள்ள ஆப்ஸைப் பற்றி நன்கு அறிந்திருங்கள் மற்றும் எல்லா பயன்பாடுகளும் புதுப்பித்த நிலையில் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

ஸ்மார்ட்போனின் சேமிப்பகத்தைச் சரிபார்க்கவும், உங்கள் மொபைலின் சேமிப்பகம் திடீரென்று தீர்ந்துவிடுவது தொல்லையாகவிருக்கும். எனவே போதுமானளவு சேமிப்பிடம் இருப்பதை உறுதி செய்து கொள்ள வெண்டும். வெளிப்புற கார்டைப் பயன்படுத்தவும்.

ஸ்மார்ட்போனைப்பயன்படுத்துவதற்கு இலகுவான விரைவான வழிகளைக்கண்டுகொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, கேமராவை இயக்க அல்லது அவசரச் செய்தியை அனுப்ப கீபோட்டை பயன்படுத்தலாம். இந்தக் குறுக்குவழிகளைக் கற்றுக்கொண்டு பயிற்சி செய்ய வேண்டும்.

'போனைக் கண்டுபிடி' செயல்பாட்டை செயற்படுத்துவதன் மூலம் தேவைப்பட்டால் தொலைவிலிருந்து தொலைபேசியைக் கண்டு பிடிக்கலாம். பெரும்பாலான ஸ்மார்ட்போன்கள் இதைச் செய்வதற்கான ஒரு முறையை வழங்குகின்றன.

எதிர்ப்பின் போது தொலைபேசியின் கேமராவைப் பயன்படுத்துவதை எளிமையாக்க வேண்டும். எதிர்ப்பின் போது, கமரா இயக்கும் போது ஒலியெழுப்பும் ஏற்பாட்டை தவிர்த்தல் வேண்டும். இது தேவையற்ற கவனத்தை ஈர்க்கும். இதனால் கேமரா அமைப்புகளுக்குச் சென்று, பாதுகாப்பான பயன்பாட்டிற்காக அதை உள்ளமைக்கவும்.

எதிர்ப்பு போராட்டத்தில் ஸ்மார்ட்போன்; பறிக்கப்படலாம், எனவே ஸ்மார்ட்போன பூட்டப்பட்டிருக்கும் போது கமராவைப் பயன்படுத்துவது நல்லது. ஆகவே ஒருவரின் ஸ்மார்ட்போன் பொலிஸால் அல்லது வேறொருவரால் எடுக்கப்பட்டால், மீடியா அல்லது மொபைலின் உள்ளடக்கத்தை அவர்களால் அணுக முடியாது. உங்கள் மொபைலை அன்லாக் செய்வதற்குப் பதிலாக, திரையில் உள்ள கீபோட்டில் இருந்து கேமராவைத் திறக்க நினைவில் கொள்ளலாம்.

ஒரு எதிர்ப்பு போராட்ட களத்தில் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை எடுக்கும்போது, ஒருவரின் நண்பர்கள் மற்றும் சகாக்களின் அடையாளம் வெளிப்படும் அபாயம் உள்ளது. அப்படியான சூழலில் அவற்றைப் பகிர்வதற்கு அல்லது வெளியிடுவதற்கு முன், அவர்களின் அடையாளங்களை படங்களில் மறைக்கவும். இதற்கு வசதியாக மொபைல் மீடியா பயன்பாட்டில் விரைவு எடிட்டரைப் பயன்படுத்தலாம். ஒரு போராட்டம் நடைபெறும் களத்தில் சகாக்களுடன் தொடர்புகொள்வதற்கு, எண்ட் – டு – எண்ட் என்க்ரிப்னை வழங்கும் ஆப்ஸைப் பயன்படுத்த பரிந்துரைக்கிறோம். குழு அரட்டை மற்றும் கான்பரன்சிங் கருவிகளுக்கான சரியான கருவியைத் தேர்வுசெய்ய வேண்டும்.



# மனிதனின் வன்முறை வடிவங்களைத் தூண்டுகின்ற ஆற்றலைக் கொண்டுள்ளன அரசின் நடவடிக்கைகள்

## வன்மையாகக் கண்டிக்கிறது மருத்துவ சங்கம்

அமைதியான போராட்டக்காரர்கள் மற்றும் சக குடிமக்களுக்கு எதிராக சட்ட அமுலாக்க அதிகாரிகள் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மற்றும் வன்முறையைப் பயன்படுத்துவதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம் என மருத்துவ சங்கம் அறிவித்துள்ளது.

கண்ணீர்ப்புகையில் உள்ள இரசாயனங்கள் சுவாசக் கோளாறுகள், கண்கள் மற்றும் தோலில் எரிச்சல் மற்றும் குறிப்பிடத்தக்க உடல்நல அபாயங்களை ஏற்படுத்துகின்றன. இந்த மோசமான நிலைமை குறித்து மிகவும் கவலையடைவதாக இலங்கை மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.

இத்தகைய சூழலில் இலங்கை மருத்துவ சங்கம் சுகாதார நிபுணர்கள் குழுவின் உறுப்பினர்கள் பின்வரும் பரிந்துரைகளை வழங்கினர்:-

அரசாங்கத்தின் அவசரநிலைப் பிரகடனம் குறித்து இலங்கை மருத்துவ சங்கம்மிகவும்அக்கறைகொண்டுள்ளது.

இத்தகைய நடவடிக்கையானது மனிதனின் வன்முறை வடிவங்களைத் தூண்டும் ஆற்றலைக் கொண்டுள்ளது.

இது ஏற்கனவே கொந்தளிப்பான சூழ்நிலையை சீர்குலைக்க வழிவகுக்கும் மற்றும் அப்பாவி குடிமக்களின் நல்வாழ்வுக்கு தீங்கு விளைவிக்கும், இத்தகைய நிகழ்வு சீர்செய்ய முடியாத சேதத்தை ஏற்படுத்தும் என்பதால், அவசரகாலச் சட்டத்தை உடனடியாக திரும்பப் பெறுமாறு அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். பொதுமக்களின் குரலுக்கு செவி சாய்த்து, நமது அன்புக்குரிய தாய் நாட்டின் நலனுக்கான விரைவான தீர்வை நோக்கிச் செயல்படுமாறு இலங்கை மருத்துவ சங்கம் கேட்டுக் கொள்கிறது. - என குறிப்பிடப்பட்டுள்ளது.



## அனைத்து எம்.பிக்களையுமே ராஜினாமா செய்யக் கோருகிறார் மஹேல ஜயவர்தன

தயவுசெய்து அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ராஜினாமா செய்து விட்டு வீட்டிலேயே இருக்கவும் என இலங்கை அணியின் முன்னாள் அணித்தலைவர் மஹேல ஜயவர்தன தெரிவித்துள்ளார். நாடாளுமன்றில் வாக்கெடுப்பின்மூலம்மீண்டும் பிரதி சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்ட ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய மீண்டும் பதவி விலகுகிறார் என அறிவித்திருந்தார்.

இந்நிலையில், இது தொடர்பாக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜயவர்தன டுவிட்டர் பதிவொன்றை மேற்கொண்டுள்ளார். அதில் அவர் குறிப்பிட்டுள்ளவை வருமாறு -

'இது நகைச்சுவை என்று நினைத்தீர்களா? நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு மத்தியில் இந்த நியமனம் முக்கியமானது போல் நேரத்தையும் பணத்தையும் வீணடித்து, மீண்டும் அவர் ராஜினாமா செய்கிறார். தயவுசெய்து அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ராஜினாமா செய்து விட்டு வீட்டிலேயே இருக்கவும்.' இவ்வாறு அவர் தனது டுவிட்டில் தெரிவித்துள்ளார்.

# அவசரகால நிலையை நீக்குமாறு கோரிக்கை

## பொது பயன்பாட்டு ஆணையம் வற்புறுத்து

கொழும்பு, மே 09

நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அவசரகால நிலை உடனடியாக இரத்து செய்யப்பட வேண்டும் என பொது பயன்பாட்டு ஆணைக்குழு கோரியுள்ளது.

அவசரகால நிலைப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமையினால் பொது அமைதியின்மை ஏற்படக் கூடிய சூழ்நிலை உள்ளதாகவும் அதனால் மின்சார விநியோகத்தில் பாதிப்பு ஏற்படக்கூடும் எனவும் அதன் தலைவர் ஜனக ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.



இதேவேளை, அவசரகால நிலை பிரகடனப் படுத்தப்பட்டமையின் ஊடாக நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி தீர்வு காண முடியாது என அமெரிக்கா உள்ளிட்ட 35க்கும் அதிக நாடுகளின் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் அறிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் தங்களது ட்விட்டர் பக்கங்களில் அல்லது அறிக்கைகளை விடுத்து அவர்கள் இதனைக் குறிப்பிட்டுள்ளனர்.

## அவசரகால நிலை அறிவிப்பு எதற்காக? தெளிவுபடுத்தக் கோருகிறது ஜே.வி.பி.

அரசாங்கத்திற்கு எதிரான மக்கள் போராட்டம் ஜனநாயகமானது, அமைதியானது என நீதிமன்றம் பல முறை உறுதிப்படுத்தியுள்ள நிலையில், எக்காரணத்திற்காக அவரகால சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது என்பதை ஜனாதிபதி நாட்டு மக்கள் அறிவிக்க வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு எதிரான அடக்குமுறையை ஜனாதிபதி தவிர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிடின் அது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

மேலும், சர்வாதிகார ஆட்சியாளர்களின் இறுதி நிலைமை என்னவாயிற்று என்பதை ஜனாதிபதி மீட்டுப்பார்க்க வேண்டும் எனவும் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

# மக்களின் கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்கும் எண்ணத்தில் ராஜபக்ஷக்கள் இப்போது இல்லை

## இம்ரான் மஹ்ரூப் எம்.பி. விளக்கம்




(ஹஸ்பர்)

மக்களின் போராட்டம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. ஆனாலும் ராஜபக்ஷக்கள் மக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்காமல் தங்களின் அதிகாரத்தை தக்கவைக்கவே நினைக்கிறார்கள் என திருகோணமலை மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் கருத்துரைக்கையில்,

எல்லாப் போராட்டங்களுக்கும் முன் ஐக்கிய மக்கள் சக்தியே மக்கள் பக்கம் நின்று முதன் முதலாக ஜனாதிபதி செயலகம் முன் உட்பட பல இடங்களில் போராட்டங்களை ஆரம்பித்து வைத்தது. 'சேர் பெயில்', 'சேர்ட பிஸ்ஸூத' போன்றவற்றைக் கூறியே ஆரம்பித்தோம்.

தற்போது நாட்டில் அவசர கால சட்டம் நடை முறைப் படுத்தப்பட்டிருப்பது புதிய விடயமல்ல. தனது சகோதரரை பாதுகாக்க அரசமைப்பை மாற்றிய இவர்க ளுக்கு இது ஒரு விடயமல்ல.

தனது குடும்பத்தைப் பாதுகாக்கவே இந்த அரசியல் நாடகம் அரங்கேற்றப்படுகிறது. பிரதமர் பதவி விலகு-வார். என்ற செய்தியின் மூலம் மக்களைப் போராட்டத்தில் இருந்து திசை திருப்ப நாடகமாடுகிறார்கள்

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் போது 52 நாள் சூழ்நிலையில் பெரும்பான்மை இல்லாமலேயே இந்த ராஜபக்ஷக்கள் பின் கதவால் ஆட்சியைத் தக்க வைக்க முயன்றவர்கள். இப்போது மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இருக்கும் நிலையில் எப்படி இருக்கப் போகிறார்கள்? இடைக்கால அரசாங்கம் என்பது ராஜபக்ஷக்களினதும் மொட்டுக் கட்சியினதும் கீழ் பிரதமரை ஏற்று அமைப்பதை ஐக்கிய மக்கள் சக்தி விரும்பாது. மீண்டும் விமல், உதயன் கம்மன்பில போன்றவர்களுடன் சேர்ந்து ஆட்சியைக் கொண்டு செல்வதா என்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தலை நடத்துவது என்ற கோரிக்கையே ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாடகவுள்ளது. - என்றார் அவர்.

மேலும் பிரதி சபாநாயகர் தெரிவில் தான் கலந்து கொள்ளாதமை தொடர்பிலும் கருத்து தெரிவித்தார்.

20 ஆவது திருத்த சட்ட மூலத்துக்கு வாக்களித்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவாளர்கள் இதை வைத்து சேறு பூச நினைக்கிறார்கள். 20 க்கு வாக்களித்தவர்கள் போன்று சந்தர்ப்பவாத அரசியல் செய்பவன் அல்லன் நான். கொள்கையின் பக்கமே இருப்பவன்.2012 இல் கூட ராஜபக்ஷக்கள் பல சலுகைகளை தருவார்கள் எனக் கூறி அழைத்த போதும் கூட நிராகரித்து விட்டு மக்கள் பக்கம் நின்றவன் நான் .

திருகோணமலையில் எரிபொருள் பிரச்சினை காரணமாகவே கொழும்புக்குச் செல்ல முடியாமலும், பிரதி சபாநாயகர் தெரிவில் பங்கேற்காமலும் இருக்க வேண்டியதாயிற்று.

இது தொடர்பில் எனது கட்சியின் தலைமைக்கும் செயலாளருக்கும் முன்கூட்டியே அறிவித்துள்ளேன். இதை வைத்து 20க்கு வாக்களித்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவாளர்கள் திசை திருப்பிச் சேறு பூச முனைவது சிறு பிள்ளைத்தனமான விடயமாகும். - என்றார்.

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

### தற்போதைய நிலையும் புரட்சிகளின் சாத்தியமும்

பதவிகளில் இருக்கும் எந்த இராணுவத் தளபதியும் ராஜபக்ஷக்களுக்கு எதிராகப் புரட்சி ஒன்றை ஏற்படுத்தக்கூடிய திராணியை கொண்டிருக்கவில்லை. மேல் தளத்திலிருந்து பத்தாம் தளம் வரை இருக்கின்ற தளபதிகள் யாவரும் கோட்டாவுடன் பணிபுரிந்து அவருக்கு விசுவாசமாக இருக்கின்றனர்.




ஆளும் பேருக்கும் ஆக உள்ள படைகள் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போருக்காக தென்னிலங்கையில் ராஜபக்ஷக்களின் ஆளுமையிலிருந்த தொகுதிகளிலிருந்து சேர்க்கப்பட்டவர்கள்.

சரத் பொன்சேகா பீல்ட் மார்ஷலாக இருந்து போரை நடத்தி, தற்பொழுது வெளியில் அரசியல்வாதியாக இருந்தாலும், அவருக்குப் படைகள் இடையே ஒரு புரட்சியை உருவாக்கக்கூடிய கவர்ச்சியும் ஆதரவுத் தளமும் செல்வாக்கும் இல்லை.

ஆகவே நாட்டை சீரான, ஸ்திரமான நிலையில் நடத்திச் செல்ல என ஏற்படும் ஒரு புரட்சியும், அதில் இருந்து எழக்கூடிய நன்மை பயக்கும் சர்வாதிகாரமும் (Beneficial Dictatorship) தமிழ் மக்களுக்குச் சாதகமாக வருவதற்கு வாய்ப்பில்லை.

கோட்டாபய போட்டியிட்டுப் பதவியை பொறுப்பேற்ற பொழுது அவரது மற்ற சகோதரர்கள் போன்று உடை அணியாதமையாலும், குரக்கன் சால்வையை அடையாளமாக்காததாலும் சற்று வேற்று மனிதராக, அரசியலுக்காக வேடம் போடாதவராகவும், தான் நினைத்தது சரி எனப் பட்டால் அதனை நடைமுறைப்படுத்தும் தன்மைகள் கொண்டவராகவும் பார்க்கப்பட்டார். விடுதலைப் புலிகளுக்கும் அதன் தத்துவ சிந்தனையாளர்களுக்கும் எதிராகக் கங்கணம் கட்டி நின்றாலும், தமிழ் மக்களது நியாயமான கோரிக்கைகளைத் தனது ஏகப்பட்ட அதிகாரப் பலங்களால் செயல்படுத்துவார் என்ற எண்ணக்கருவும் விதைக்கப்பட்டது.

பதவியேற்பு வைபவத்தில் இருந்து அவர் காட்டிய செயற்பாடுகள், சிங்கள – பௌத்தத்தை முன்னெடுக்க விழைந்த தீர்மானங்கள், அவர் நாட்டுக்காக ஏற்படுத்தக்கூடிய நன்மை பயக்கும் சர்வாதிகாரம் தமிழ் மக்களை உள்ளடக்கும் எனக் கருதுவதற்கில்லை என்பதை உறுதிப்படுத்தின.



### தமிழ் மக்களது அனுகுமுறை

இவை கட்டங்கட்டமாகப் பார்க்கப்படவேண்டும்.

தற்சமயம் இருக்கும் 20ஆவது திருத்தத்தை உள்ளடக்கிய நிறைவேற்று அதிகார முறைக்கு அல்லது அதனை 19ஆம் திருத்த நிலைக்குக் குறைப்பதற்காகப் பெரும்பான்மைக் கட்சிகள் சமர்ப்பித்திருக்கும் பிரேரணைகளுக்காக ஆதரவோ, எதிர்ப்போ காட்டி நேரம் விரயமாக்குவதில் தமிழ் மக்களுக்கு எந்தப் பிரயோசனமும் வருவதற்கில்லை.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை முற்றாக நீக்கப்பட்டு, அதிகாரங்கள் நாடாளுமன்றத்துக்குத் திரும்பினாலும், அவை சிங்களப் பெரும்பான்மையினரின் கைகளில் இருக்கும் வரை, தமிழ் மக்களுக்குப் பலன் தரப்போவதில்லை.

ராஜபக்ஷக்களின் ஆட்சி நீக்கப் படுவதற்கான மாற்று ஆட்சிகளுக்காகத் தமிழ் மக்கள் தமது தார்மீக ஆதரவைத் தர வேண்டும். அந்த ஆதரவு இதுவரை எடுத்துச்செல்லப்பட்ட பேரினவாதத்தைப் பலவீனமாக்கும்.

அதற்காக – ஆட்சி மாற்றங்களுக்காக – பெரும்பான்மை கட்சிகள் தங்களுக்குள்ளேயே மல்லுக்கட்டி, காலிமுகத்திடல் போராட்டக்காரர்களின் கோரிக்கைகளையும் அனுசரித்து, மகா சங்கத்தின் எண்ணங்களையும் கணக்கெடுத்து, நாட்டைப் பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீட்டெடுக்க வழி தேட வேண்டும். அதை அவர்களிடமே விட்டு விட வேண்டும்.

இன்னும் ஒரு விதத்தில் பார்த்தால் சர்வ அதிகாரம் கொண்ட நாடாளுமன்றத்திற்கு வெளியேயான ஜனாதிபதி ஆட்சி முறை நன்மை பயக்கும் தன் அதிகாரங்களால் சில மாற்றங்களை ஏற்படுத்தலாம். 1983இல் இருந்து இந்தியா இனப்பிரச்சினைக்கான தீர்வுகளை முன்வைத்தும் அவற்றை ஶ்ரீலங்கா நாடாளுமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. இழுத்தடிக்கப்பட்டது. பின்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைப் பணிய வைத்து, அவரை இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் கையொப்பமிட வைக்க இந்தியாவால் முடிந்தது.

கோட்டாவினால் தானாகவோ, இந்தியாவின் அழுத்தத்தாலோ நாட்டின் எதிர்காலத்திற்காக இனப்பிரச்சினையைத் தீர்த்து முன்னேற அனுசரணை தரும் அரசமைப்பு மாற்றங்களை ஏற்படுத்தி பயணிக்கலாம். ஜே.ஆர் போலவே நெஞ்சில் நஞ்சு நிறைந்து இவர் செய்யும் மாற்றங்களிலும் இதய சுத்தி இல்லாது ஒப்புக்கானவையாக இருந்தாலும் கூட, அதைச் செய்விக்கக் கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன.

கட்சிகள் தங்களது ஆதரவு தளத்திற்காக நிறைவேற்று அதிகார முறையை முற்றாக ஒழித்தோ, குறைத்தோ ஆக்கினாலும் தமிழ்மக்கள் அவற்றில் நேர விரயம் செய்யாமல், அவை கடந்து போக 'ஓடு மீன் ஓடி, உறுமீன் வரும் காலம் வரை' காத்திருக்க வேண்டும்.

சுருக்கமாகப் பார்த்தால் நாடாளுமன்றம் அதிகாரங்களை கொண்டிருந்த 1948 – 1972 காலப்பகுதியில் சோல்பரி அரசமைப்பின் கீழ் இருபத்தி ஒன்பதாம் சரத்தின் அடிப்படையில், பாதுகாப்புகள் இருந்தும், தமிழ் மக்களுக்குப் பாதகமான சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1972 இலிருந்து 1978 வரை – ஜே.ஆர். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை அமல் படுத்தும் காலம் வரை – நாடாளுமன்றம்தான் அதிகாரத்தைக் கொண்டிருந்தது. அந்த வருடங்களிலும் தமிழ் மக்களுக்குப் பாதிப்பு தரும் சட்டங்கள் பல அமுல்படுத்தப்பட்டன.

1978 இல் இருந்து 2010 வரை ஜே.ஆர். ஏற்படுத்திய அதிகாரங்கள் கொண்ட அரசமைப்பு இருந்தது. 2010இல் மஹிந்த அதற்கு மேலும் அதிகாரங்களைப் பெற்றார். இவை நல்லாட்சி காலத்தில் 2015 இல் திருத்தங்களால் குறைக்கப்பட்டன. அந்தத் திருத்தங்களாலும் தமிழ் மக்களுக்கு எதுவும் நன்மை கிடைக்கவில்லை.

பின்னர் கோட்டா 19ஆவது சட்டத் திருத்தத்துக்கு மேலே போய் 20ஆம் திருத்தத்துடன் பாரிய அதிகாரங்களோடு அமர்ந்துகொண்டார்.

ஆக, அதனை இல்லாமலாக்குவ–தும், குறைப்பதும் பெரும்பான்மைச் சிங்கள மக்களிடமே

☞ 11



காலைக்கதிர் Kalaikkathir

## மஹிந்த இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏற்கனவே தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலின் படி அமைச்சரவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இன்று மாலை கூடும்.

அதன் பின்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமது ராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதியிடம் கையளிப்பார். அத்தோடு இந்த அமைச்சரவை செயலிழக்கும்.

ஏற்கனவே தயாரிக்கப்பட்டு நிலுவையில் இருக்கும் அமைச்சரவைப் பத்திரங்களை உரியமுறையில் கையாள்வதற்காக இன்று மாலை வரை தமது ராஜினாமாவைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தள்ளி வைத்திருக்கின்றார் என்று கூறப்பட்டது.

இன்று நடைபெறும் அமைச்சரவை கூட்டம் தான் பிரதமர் என்ற முறையில் மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ளும் கடைசி கூட்டமாக இருக்கும்.

அடுத்த 17ஆம் தேதி நாடாளுமன்றம் கூடும் போது தமது மொட்டுக் கட்சியை சேர்ந்த குறைந்தது எண்பது எம்.பிகளுடன் எதிர்க்கட்சிப் பக்கம் போய் அமர்வதற்கு மஹிந்த ராஜபக்ஷ திட்டமிட்டு இருக்கிறார்.

அதேசமயம் அரசிலிருந்து மொட்டுக் கட்சி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் வெளியேறி, எதிர்க்கட்சி தரப்புக்கு வந்துவிட்டதாலும், ஐக்கிய மக்கள் சக்தியை விட அதிக உறுப்பினர்களுடன் எதிரணியில் தங்கள் கட்சி இருப்பதாலும் எதிர்க்கட்சித் தலைவர் பதவி அக்கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட வேண்டும் என்று கோரும் கடிதம் ஒன்றை மஹிந்த ராஜபக்ஷ சார்பில் அவரது பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம் சபாநாயகருக்கு அனுப்பி வைப்பார் என்றும் தெரிகின்றது.

நாளை மறு தினத்தில் இருந்து எதிர்க்கட்சித் தலைவர் கோதாவில் மஹிந்த ராஜபக்ஷ தனது அரசியல் செயற்பாடுகளைத் தொடங்குவார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

---

## தமிழரின் அடிப்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த நாட்டின் பொருளாதாரம் இன்று பாரிய வீழ்ச்சியைக் கண்டிருக்கிறது. இந்த வீழ்ச்சிக்குக் காரணம் என்ன? ஆட்சியாளர்களின் திட்டமிடப்படாத பொருளாதாரக் கொள்கையும், அவர்களிடம் இருக்கின்ற இன ரீதியான, மத ரீதியான சிந்தனைகளும், இராணுவச் சிந்தனையோடான செயற்பாடுகளும் அடிப்படை பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணம். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் வாழ முடியாமல் மக்கள் தெருக்களில் போராடிக் கொண்டு இருக்கிறார்கள். காலிமுகத்திடலில் இளைஞர்கள் போராடிக் கொண்டு இருக்கிறார்கள்.

இந்த வேளையிலும் இன்றைய தினம் இலங்கையின் இராணுவத் தளபதி யாழ்ப்பாணம் மயிலிட்டிப் பகுதிக்கு வந்து வந்து அடாத்தாக கட்டப்படும் பௌத்த விகாரையைப் பார்வையிட்டுச் சென்றிருக்கிறார்.

பொருளாதார ரீதியில் இந்த நாடு சீரழிந்து கொண்டிருக்கிற நிலையிலும் தமிழர் தேசங்களில் பௌத்த அடையாளங்களை நிறுவுவதில் அரச இயந்திரம் குறியாகவே இருக்கிறது.

எங்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்ற இன ரீதியான ஒடுக்குமுறையைக் காலி முகத்திடலில் இருக்கும் இளைஞர்கள் எவ்வாறு உணர்ந்து கொள்ளப் போகிறார்களோ என்று எனக்கு தெரியவில்லை. தமிழர்கள் மீதான அடக்கு முறைகளும் ஒடுக்கு முறை களும் தொடர்ந்து கட்டவிழ்த்து விடப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இங்கு இருக்கின்ற பல இளைஞர்கள் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போதும் எங்கள் இளைஞர்களை விசாரணைக்கு அழைக்கிறார்கள். அடிக்கடி விசாரணை என்ற பெயரில் இளைஞர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். இவற்றையெல்லாம் கடந்துதான் இந்த மக்கள் இந்த மண்ணில் தங்கள் பயணங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

பல வளர்ந்த நாடுகளின் இராணுவ அளவீடுகளை விட இலங்கை தன்னுடைய மனித அளவுக்கு மேலால், அளவுக்கு மீறிய இராணுவப் படைகளையும் தன்னுடைய துணை படைகளையும் வைத்திருப்பதனால்தான் இலங்கையில் இவ்வளவு பெரிய பொருளாதாரச் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது என்பதை இன்னும் ஒரு சிங்களத் தலைவரும் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை. கடந்த 30 ஆண்டுகள் எங்கள் மீது புரியப்பட்ட போருக்காக சர்வதேச சமூகத்திடமும் பல நாடுகளிடமும் கடன் அடிப்படையிலும் மானிய அடிப்படையிலும் இலங்கை பெற்றுக்கொண்டவற்றை எல்லாம் யுத்த தளபாடங்களாகவும் இராணுவப் பெருக்கமாகவும் மாற்றிக் கொண்டது.

நாங்கள் காலி முகத்திடலில் உள்ள இளைஞர்களின் அழைப்பைப் பார்த்து இருக்கிறோம்.

'வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்கள் இந்த மண்ணிற்குச் சொந்தமானவர்கள். இது தமிழர்களுடைய தேசம். வடக்கும், கிழக்கும் இணைந்த இந்த மண்ணிலே உங்களுக்கு ஓர் அரசியல் உரிமை இருக்கிறது. அதனை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்' என்கிற ஒரு சிங்கள இளைஞனுடைய குரலுக்காக நாங்கள் காத்திருக்கிறோம்.

ஒரு சிங்களத் தலைவர் அல்லது போராடுகின்ற சகோதர, சகோதரிகளே! நீங்கள் தமிழர்களைத் தேசிய இனமாக அடையாளப்படுத்துகின்ற நாளை நாங்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம். – என்றும் அவர் மேலும் தெரிவித்தார்

விநாயகர் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் விஜயசங்கர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுடன் பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் சிறீரஞ்சன், உபதவிசாளர் எமிலியாம்பிள்ளை, விநாயகர் ஆலயத்தின் பிரதம குரு, அருட்தந்தையர்கள், பாடசாலையின் அதிபர்கள், பூநகரி உதைபந்தாட்ட லீக் நிர்வாகத்தினர் மற்றும் பெருந்திரளான இரசிகர்களுடன் போட்டிகள் நடைபெற்றன.

---

## யாழ்ப்பாணம்...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி...)

உள்ள விடயம். அவற்றைக் கடந்து போக விட்டு உறுமீன் வரும் வரை காத்திருக்க வேண்டும். ஆனால் அந்த உறுமீன் எப்பொழுது வரும் என்று கேள்வி எழுகின்றது.

விரும்பியோ விரும்பாமலோ பொருளாதாரப் புயலின் சிக்கலில் அகப்பட்டு மூழ்கவிருக்கும் ஒரு கப்பலில்தான் தமிழ் மக்களும் ஒன்றாக இருக்கிறார்கள். அவர்கள் அந்தக் கப்பலின் வடக்குக் கிழக்கு மூலையிலோ இன்னும் சிலர் உயரமான பகுதியிலோ நிற்கிறார்கள் என்பதால் தப்பி விடுவார்கள் என எண்ணுவது முட்டாள்தனம். கப்பல் முழுவதும் பொருளாதார நெருக்கடியால் மூழ்கும் நிலை. ஆகவே அந்தப் பொருளாதார சிக்கல்களில் இருந்து மீள தமிழ் மக்கள் பங்கும் அவசியமாகிறது. ஆட்சி மாற்றம் வந்து, அதன் முறைகளில் சில வித்தியாசங்களை இணைத்து விட்டால் எல்லோரும் தப்பி விடலாம் என்பதும் புத்திசாலித்தனமானது அல்ல. நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கான நிலையான, ஸ்திரமான வழி தமிழ் மக்களையும் உள்வாங்கி, மேலெழுந்து செல்ல வேண்டுமென்ற புரிந்துணர்வில் கோரிக்கைகள் வரும்போது தான், அந்த உணர்வில் ஏற்படும் அழைப்புகளில்தான் யதார்த்தமான தீர்வு காணலாம்.

இல்லாவிடில் அது 'ஆறு கடக்கும் வரை அண்ணன், தம்பி. கடந்த பின் நீ யாரோ, நான் யாரோ' என்ற பழங்கதையாகத்தான் இருக்கும்.

(வளரும்)

# காலிமுகத்திடலில் காளிக்குப் பூஜை



கொழும்பு – காலிமுகத்திடலில் அரசுக்கு எதிராகப் பல்வேறு வடிவங்களில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

சனியிரவு காளிக்குப் பூஜை வழிபாடுகளை மேற்கொண்டு தப்பு அடித்து, அரசுக்கு கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

# கோட்டா பதவியிலிருந்து விலகினால் ஜனாதிபதி பதவியை ஏற்க நான் தயார்

## சஜித் அதிரடி அறிவிப்பு

கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதி பதவியிலிருந்து விலகினால், ஜனாதிபதி பதவியை ஏற்பதற்கு நான் தயார்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அறிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதன்போது, ஜனாதிபதி பதவி விலகினால், நாடாளுமன்றத்தில் பெரும்பாலானவர்கள் விரும்பினால் ஜனாதிபதியாகச் செயற்படத் தான் தயார் என்று சஜித் தெரிவித்துள்ளார்.

அதன்பின்னர் ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்து நாடாளுமன்றத்துக்கு அதிகாரத்தை வழங்கவும் அவர் இணக்கம் வெளியிட்டுள்ளார்.

# அவசரகால சட்டத்தை உடன் வாபஸ் பெறுக!

## கோட்டாவிடம் சுரேஷ் வலியுறுத்து

அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தி, அரசு மீண்டும் தவறிழைத்துள்ளது.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அவசரகால நிலையால் அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவார்களானால் அதற்கான விளைவுகளை அரசு சந்திக்க வேண்டியேற்படும்.

எனவே, தற்போது பிறப்பிக்கப்பட்டுள்ள அவசரகால நிலையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாக வாபஸ் பெற வேண்டும் – என்றார்.

---

## பதவி விலக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்ற உத்தரவாதத்திற்கு உட்பட்டு பதவி விலகுவதற்கு பிரதமர் இணக்கம் தெரிவித்திருந்தார் என்றும் தகவல் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் பிரதமர் மஹிந்த இன்று தனது பதவி விலகல் குறித்து அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கு முன்னரே கட்சியின் அடுத்த மட்டத் தலைவர்களை பிரதமர் மஹிந்தர் இன்று சந்திக்கின்றார்.

---

## இரணைமடுக் குளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மயூரன் வயது 22 என்னும் இளைஞனே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

இரணைமடுக் குளத்தில் மீன்பிடியில் ஈடுபடும் இளைஞன் வழமைபோன்று நேற்றும் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளார். இதன்போதே படகு சாய்ந்து தவறி வீழ்ந்தமையினால் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் உடலை மீட்ட பொலிஸார் சடலத்தை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

தந்தையின்றி 4 பெண் சகோதரிகளுடன் குடும்பச் சுமையைத் தாங்கி வாழ்ந்த இளைஞனே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

---

## அரியாலைக் கடலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாறு மரணமானார்.

நீரில் மூழ்கியவரை மீட்டு உடனடியாக அம்புலன்ஸ் மூலம் ஆஸ்பத்திரிக்கு அனுப்ப முயற்சி எடுக்கப்பட்டது. அம்புலன்ஸுடன் வந்த மருத்துவர் பாதிக்கப்பட்டவரை பரிசோதித்து அவர் உயிரிழந்தமையைஉறுதிசெய்து பொலிஸாருக்குத் தகவல் வழங்குமாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

---

## தலைநகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போக்குவரத்து பாதிக்கப்பட்டு இருந்தது. இந்த வீதி மறிப்புகளை அகற்றுவதில் பொலிஸார் ஈடுபாடு காட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வீதி மறிப்புப் போராட்டம் பொலிஸாரின் கண்முன்னே தொடர்ந்தது. எரிபொருள், எரிவாயு தட்டுப்பாட்டினால் மக்களின் சீற்றம் உச்சத்தை எட்டியிருப்பதை இந்த வீதி மறிப்புகள் எடுத்துக் காட்டின.